# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 09 அதிர்வு 99 புரட்டாதி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



**Budget Friendly**
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198









ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

## INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

# உள்ளிருந்து எழுவதோ நிறவெறிப் பேய்

● ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி




இவ்வொரு முறையும் ஊரில் வசிக்கின்ற எனது நண்பர்களிடமோ அல்லது உறவினர்களிடமோ பேசும்போது எழும் கேள்வி இதுதான், "அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இனவெறிப் போராட்டம் நடக்கிறதே. அத்தோடு வெள்ளையர்கள் புலம்பெயர்ந்த ஏனைய இன மக்களை தாக்கும் சம்பவங்கள் நடக்கிறதே. உங்கள் ஊரில் வாழும் வெள்ளையர்களுக்கு இந்த எண்ணமெல்லாம் கிடையாதா ?" என்று. அதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் நகர்ந்துவிடுவேன். ஆனால் அப்போதெல்லாம் எழுத்தாளர் சச்சிதானந்தன் சுகிர்தராஜா எழுதிய ஒரு வாக்கியம் தான் நினைவுக்கு வரும், " வெள்ளையர்களுக்கு இனவெறி இருக்கிறதா என்று கேட்பது , நாகபாம்பின் நாக்கில் விஷம் இருக்கிறதா என்று கேட்பதற்கு ஒப்பது" என்ற வாக்கியம் தான் அது. நீங்கள் புலம்பெயர்ந்த இந்தத் தேசத்தில் ஒரு முறையாவது இனவெறித் துவேஷ வார்த்தைகளையோ, அல்லது மிக நைச்சியமான ஒடுக்குமுறையையோ இதுவரை ஒரு தடவை கூட அனுபவிக்கவில்லையென்றால் , நீங்கள் கண்டிப்பாக தேவகுமாரன் தான்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி "ஆஸ்திரேலியாவுக்கான அணிவகுப்பு" என்ற பெயரில் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான வெள்ளை இன மக்கள் குடியேற்ற எதிர்ப்புப் பேரணிகளில் கலந்து கொண்டனர். முன்பு மறைமுகமாக சமூக ஊடகங்களில் மட்டுமே காணப்பட்ட இவ்வகையான இனவெறித் துவேஷங்கள் இப்பொழுது வெளிப்படையாக "குடியேற்ற எதிர்ப்பு" என்ற பெயரில் நாடெங்கிலும் திரண்டு வந்திருப்பதைக் காணும்பொழுது பயமாய் இருக்கிறது. இந்தப் பேரணிகளை பல்வேறு தீவிர வலதுசாரி மற்றும் நியோ-நாஜிக் குழுக்கள் ஒருங்கிணைத்திருந்தன. இந்த புதிய-நாஜிக் குழுக்கள் மற்றும் ஆணவம் பிடித்த தீவிர வலதுசாரிகள் அனைவரும் ஒன்று பட்டு ஓரணியாக இந்தப் பேரணிகளில் கலந்து கொண்டனர். இந்த நியோ-நாஜிக்கள் தங்களது "வெள்ளை இன மேலாதிக்கத்தை ஊக்குவிக்க 'சாதாரண குடும்ப மக்களின் ' வாழ்வாதாரக் குடியேற்றப் பிரச்சினைகளுக்கு காரணியாக "குடியேற்ற எதிர்ப்பு" ஒரு கேடயமாக பயன்படுத்தியதில் வெற்றி கண்டுள்ளனர் . பெரும்பாலான முக்கியமான அரசியல் கட்சிகள் இந்தப் பேரணிகளுக்கு வெளிப்படையாகக் கண்டனம் தெரிவித்த போதிலும் மறைமுகமாக வெள்ளையல்லாத மற்ற மக்களின் குடியேற்றங்களுக்கு எதிரான வெறுப்பினை காண முடிந்தது. "ஆஸ்திரேலியாவுக்கான அணிவகுப்பு" நிகழ்வுக்கு வெள்ளை மேலாதிக்கவாதிகள் மட்டுமே ஆதரவளித்தனர் என்று நாம் நினைத்தாலும் பிரதமர் அந்தோணி அல்பானீஸ், "சில நல்லவர்களும் கலந்து கொண்டனர்" என்று ஒப்புக்கொண்டார். அந்த நல்லவர்கள் யார் ? விஷப்பாம்பில் எங்கேயப்பா நல்ல பாம்பு இருக்கிறது ?

ஆஸ்திரேலியாவின் இனவெறிக்கான இந்தப் பேரணிக்காக தீவிர வலதுசாரி 'தீவிரவாதிகள்' மீது மட்டும் குறை கூற முடியாது. இது மக்களின் மைய நீரோட்டத்தோடு கலந்திருப்பது நமக்கு நன்கு தெரிகிறது . இது மிக முக்கியமான ஆழமான சமூகப் பிரச்சினை என்ற வகையில் நாம் அணுகாவிடில் ஒன்றுபட்ட பல்வேறு இன மக்கள் கலந்த ஆஸ்திரேலியா என்பதை வெறும் காகிதத்தில் மட்டுமே காண முடியும். இந்தப் பேரணிகளின் போது வெள்ளை இன வெறியர்கள் எவ்வளவு மூர்க்கத்தனமான தாக்குதலில் ஈடுபட்டனர் என்பதைக் காணொளிகளில் பார்க்கும்பொழுது எதிர்காலத்தில் இந்த மண்ணில் வாழப் போகும் நமது சந்ததிகள் என்றும் அந்நியரே. இந்தப் போராட்டங்கள் குடியேற்றங்களுக்கு எதிரான போராட்டமில்லை என்பது அவர்கள் பூர்வகுடி மக்களின் இறையாண்மை மையம் (Camp Sovereignty) மற்றும் பூர்வகுடி மக்களை தாக்கியது மூலம் அவர்களுக்கு வெள்ளை அல்லாத அனைவரும் எதிரிகளே என்பதை வெளிப்படுத்தியது. இங்கு வேலை பார்க்கும் இடங்களில் வெள்ளை அல்லாத எல்லோரிடமும் தவறாமல் ஒரு கேள்வி கேட்கப்படும் " உங்கள் ஊர் எந்த ஊர்? ". ஆனால் வெள்ளை இனத்தைச் சேர்ந்தவன் எந்த நாட்டிலிருந்து இந்த ஊருக்குப் புலம்பெயர்ந்தாலும் "அவன் ஆஸ்திரேலியர்களில் ஒருவன் " . இந்தப் போராட்டங்களுக்கு பிறகு "எனது இனம் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. ஆஸ்திரேலியாவிற்கான பேரணிக்குப் பிறகு, நான் எப்படி பாதுகாப்பாக உணர்வேன்?" என்ற கேள்வி எல்லா புலம்பெயர்ந்தோர்களிடம் எழுகிறது என்று சொன்னால் அது மிகையில்லை.

ஆஸ்திரேலியாவில் பணவீக்கம் அதிகரித்திருக்கிறது,வீட்டு வசதிப் பற்றாக்குறை ,வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம் யார் தெரியுமா?. வேறுயார், புலம்பெயர்ந்தவர்கள் தான் . இப்படி இந்த தீவிர வலதுசாரிகள் கூறும் ஒவ்வொரு கட்டுக்கதைகளுக்கும் பதில்சொல்ல வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. இந்த கட்டுரையில் ஒவ்வொரு பொய்களையும் உடைக்கிறேன்.

1. குடியேற்ற எண்ணிக்கை பற்றிய தவறான தகவல்கள்:

"ஒவ்வொரு நாளும் 1,500 பேர் ஆஸ்திரேலியாவிற்கு வருகிறார்கள்" என்று தவறான தகவல் பரப்பப்படுகிறது. முதலில் இந்த எண்ணிக்கை "வெளிநாட்டு வருகை மற்றும் புறப்பாடு தரவுகளிலிருந்து" பெறப்பட்டது, அதாவது நாட்டிற்கு வருகை தந்த பயணிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை உள்ளடக்கியது அதாவது அந்த 1500 பேரும் புலம்பெயர்ந்தோர்கள் கிடையாது. கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் குடியேற்றங்களை விட 95,000 பேர் மக்கள் அதிகமாக நாட்டை விட்டு வெளியேறினர்.இதன் காரணமாக அரசாங்கம் 2022-23 கால கட்டத்தில் மிக அதிகமாக நிரந்தர குடியேற்ற விசாக்களை வழங்கியது . ஆனால் லிபரல் கட்சியினரோ ' லேபர் அரசாங்கம் தான் ஆட்சிக்கு வந்த இரண்டு வருடங்களில் 1 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கு விசா வழங்கியது' என்று குற்றம் சாட்டினர். அதாவது 2020-21 கால கட்டங்களில் அனுமதிக்க வேண்டிய விசா எண்ணிக்கையை 2022-23 இல் வழங்கியது குற்றம் என்பதை மறைத்து தகவல் பரப்பி வருகின்றனர். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில் 2024 ஆம் ஆண்டில் குடியேற்ற விகிதம் கடந்த ஆண்டை விட 37மூ குறைவு. ஆனால் தவறான விஷமத் தகவல்கள் பரப்புவதன் மூலம் சாதாரண மக்களுக்கு மிக அதிகமாக குடியேற்றவாசிகள் தங்கள் வேலைகளை அபகரித்துக்கொள்கின்றனர் என்ற எண்ணத்தை மனதில் வேரூன்ற வைக்கலாம் என்றால் மிகையில்லை .

2. குடியேற்றங்களுக்கும் வீட்டுவசதிப் பற்றாக்குறைக்கும் இடையிலான இல்லாத தொடர்பு

"அதிக அளவிலான குடியேற்றம் வீட்டுவசதி நெருக்கடியை ஏற்படுத்துகிறது" என்ற வாதம் தொடர்ந்து எல்லா மக்களிடமும் பரப்பப்படுகிறது. ஆனால் கடந்த காலங்களில் வீட்டுமனைத் தகவல்களை ஆராய்ந்து பார்த்தால் இது எவ்வளவு பெரிய கட்டுக்கதை என்பது நமக்கு விளங்கும்.

அதாவது 2020-21 கால கட்டங்களில் வெளிநாடுகளிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு புலம்பெயந்தோர் எண்ணிக்கை கடந்த காலங்களில் இல்லாத அளவிற்கு மிகக் குறைவு. அது மட்டுமின்றி அளவுக்கதிமாக மக்கள் நாட்டினை விட்டு வெளியேறினர். ஆனால் இந்த ஆண்டுகளில் வீட்டுமனை விலை குறைந்ததா ? என்ன நடந்தது? அரசின் தவறான செயல்முறை திட்டங்களில் வீடுகளின் விலை அதிகரித்தது. இதன் காரணமாக வீட்டுவசதிப் பற்றாக்குறை 100 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்தக் கால கட்டத்தில் உயர்ந்திருந்தது. குடியேற்றங்களுக்கும் ,வீட்டு வசதிப் பற்றாக்குறைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பது நமக்கு நன்கு தெரிகிறது அல்லவா.

3. புலம்பெயர்ந்தோரின் பொருளாதாரப் பங்களிப்புகள்

"புலம்பெயர்ந்தோர்கள் ஆஸ்திரேலியாவில் பிறந்தவர்களுக்குச் செல்ல வேண்டிய (அதாவது வெள்ளையின மக்களுக்கு) வளங்களை வீணாக்குகிறார்கள்" என்ற கூற்றுகள் வெளிப்படையாகவே முற்றிலும் தவறானவை் உண்மை வேறுவிதமாக இருக்கிறது .

நிரந்தரக் குடியிருப்பு விசா பெற்ற கணிசமான பகுதியினர் தகுதி வாய்ந்த தொழில்நுட்ப விற்பன்னர்கள். 2024-25 நிதியாண்டில் 185,000 பேருக்கு நிரந்தர வதிவிட விசா வழங்கப்பட்டது . இந்த விசாவில் 71 சதவிகிதம் நமது நாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் உள்ள இடைவெளிகளை நிரப்ப சிறப்புத் தகுதிகள் மற்றும் திறன்களைக் கொண்ட திறமையான தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது." அதாவது நமது நாடு தொடர்ந்து செயல்பட தகவல் தொழில்நுட்பம், பொறியியல் கல்வி மற்றும் நர்சிங் போன்ற துறைகளில் போதுமான அளவில் பணியாற்ற ஆஸ்திரேலியாவில் பிறந்தவர்கள் இல்லை" என்பதே இங்கு குறிப்பிடத்தகுந்த விஷயம். இந்த வேலைகள் நிரப்பப்படவில்லையெனில் , பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு பாதகமாக முடியும் .புலம்பெயர்ந்தோர்கள் இங்குள்ள வளங்களைப் பறிப்பதில்லை அவர்கள் அரசாங்க வழங்கும் சேவைகளில் நிதி பெறுவதை விட அதிகமாக வரிகளை திருப்பி செலுத்துகிறார்கள். அதாவது ஒவ்வொரு திறமையான புலம்பெயர்ந்தவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆஸ்திரேலியாவிற்கு கூ250,000 நிகர லாபத்தை வழங்குவார்கள்" என்று கிராட்டன் நிறுவன புள்ளிவிபரம் நமக்கும் சொல்கிறது.

நியோ-நாஜிக் குழுக்களின் தலைவனான ஜாக் எல்டிஸ் "புலம்பெயர்ந்த வெள்ளையர்கள் அல்லாத அனைவரையும் இந்த மண்ணிலிருந்து வெளியேற்ற வேண்டும் " என்று கோஷமிட்டபொழுது சிட்னியில் ஒரே ஆரவாரம். ஊடகத்துறையினர் அவரை நோக்கி "நீங்கள் நிறவெறியரா ?"என்று கேட்டதற்கு " ஆம் ,நான் நிறவெறியன் தான். நான் வெள்ளையன் என்பதில் பெருமை கொள்கிறேன்.இந்த மண்ணிலிருந்து வெள்ளையர் அல்லாத மக்கள் வெளியேறும் வரை போராடுவேன். நான் நியோ-நாஜி என்பதில் பெருமை கொள்கிறேன்" என்கிறார். மெல்பேர்னில் நடந்த பேரணியில் உரையாற்றிய தமோஸ் செவேல்", "நமது ஆஸ்திரேலியாவைப் பாதுகாக்க வேண்டும், நாடாளுமன்றத்தின் ஆஸ்திரேலியாவை அல்ல, குடியேற்றத்தை நிறுத்தி மீண்டும் ஒரு வெள்ளையின தேசமாக மாற்ற வேண்டும். 1.4 பில்லியன் சீனர்கள் மற்றும் 1.4 பில்லியன் இந்தியர்கள் உள்ளனர், இந்த உலகில் பில்லியன் கணக்கான பிற இன மக்கள் உள்ளனர், அவர்கள் அனைவருக்கும் ஒரு தேசம் உள்ளது, இந்த நிலத்தில் அவர்களை இடம்பெயர அனுமதித்தால் இந்த நாடு வெள்ளையின ஆஸ்திரேலியாவாக இருக்காது. நமது எண்ணிக்கையைப் பார்க்காமல் , பிற நிறமக்களின் குடியேற்றத்தை நிறுத்தவில்லை என்றால், நமது இனத்தின் மரணம் நிச்சயம்." என்று இனவெறியுடன் பேசியிருக்கிறார். இவர்கள் மட்டுமின்றி முக்கியமான அரசியல்வாதிகளான பாலின் ஹேன்சன் மற்றும் Nampijinpa Price இன வெறியினை தூண்டக்கூடிய பேச்சுகளும் நம்மை அருவெருப்பு படவைக்கின்றன. நியாயமான நேர்மையான , பல்லினம் கலந்த ஆஸ்திரேலியாவாக வரும் காலங்களில் எப்படி இருக்க முடியும் என்பதை நினைத்தால் கவலையாக இருக்கிறது.

Sam Selvon எழுதிய Moses Ascending நாயகனான மோசே எப்பொழுது இந்த வெள்ளையின நாட்டில் இனக்கலவரம் வெடிக்கும் என்று நினைக்கிறான். "அதாவது வெள்ளையர் மனதில் என்றைக்கு புலம்பெயர்ந்த கறுப்பர்கள் (வெள்ளையினம் சாராதவர்கள் ) சொகுசாக , அனைத்து வசதிகளுடன் மிகுந்த மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்ற கருத்து என்று தோன்றுகிறதோ , அப்பொழுது எழும் கலவரமானது நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கி பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் "என்று யோசிக்கிறான். இப்போது நடக்கும் கலவரங்களைப் பார்க்கும்போது எனக்கும் இதுதான் காரணமாக இருக்க முடியும் என்றே தோன்றுகிறது.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices
& Things
Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 99 புரட்டாதி 2025 தொ.பே:1800 960162

## ஜெனிவாவுக்கு புதினம் பார்க்கப்போவோரே!!!

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்து விட்டன. ஈழத்தமிழர்களது நியாயமான அரசியல் அபிலாசைகள் ஆயுதமுனைகயில் மௌனிக்கப்பட்டும் பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தப் பதினைந்து ஆண்டுகளில் உள்ளக ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தமிழர்கள் தமது அரசியல் அபிலாசைகளை முன்னிறுத்திப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத் திருக்கின்றனர்.

இலங்கையில் இடம்பெற்றது தமிழர்களுக்கு எதிரான இனவழிப்புத்தான் எனவும், அதற்கு சர்வதேச நீதியே வேண்டும் எனவும் ஈழத்தமிழர்கள் உரத்துக் குரலெழுப்பியிருக்கின்றனர்.

ஈழத்தமிழர்கள் அரசற்ற இனமாகவும், ஒற்றுமையற்ற இனமாகவும் இருப்பதனால் இந்த அவலக்குரல்கள் சரியான விதத்தில் சர்வதேச அரங்கின் முன் சென்றுசேரவில்லை. தாயகத்திலும், புலம்பெயர் தளத்திலும் காணப்படுகின்ற குழப்பமான சூழல் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை வெகுவாகப் பாதித்திருக்கின்றது.

கடந்த பதினைந்தாண்டுகளில், வருடத்திற்கு இரு தடவைகள் இடம்பெறும் ஐ.நா மனிதவுரிமைப் பேரவையின் கூட்டத்தொடர்களில் ஈழத்தமிழர் விடயம் பேசுபொருளாக இருந்திருக்கின்றது. ஈழத்தமிழர்களை முன்வைத்து இலங்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தீர்மானங்கள் கொண்டுவரப்படும்போது ஆட்சியிலிருக்கின்ற இலங்கை அரசுகளை நோக்கி பல்வேறு நிபந்தனைகள், கேள்விகள், விமர்சனங்கள் உலகின் முக்கிய அவையில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் மனிதவுரிமைகள் விடயத்தில் முன்னேற்றம் தேவை, இறுதிப் போரின்போது இழைக்கப்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் நீதியை வழங்கவேண்டும் எனப் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சர்வதேச விசாரணையில் தொடங்கி, கலப்பு பொறிமுறைக்கு பரிந்துரைத்து கடைசியில் உள்ளக விசாரணையை வலுப்படுத்துவதில் வந்து நிற்கிறது ஐ.நா மனிதவுரிமைகள் பேரவை ஈழத்தமிழர்களை வைத்து நடத்தும் நாடகம். இலங்கையைக் கையாள விழையும் மேற்கு நாடுகள் ஈழத்தமிழர் விடயத்தை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகின்றமைதான் இதன் மூலம் அம்பலப் பட்டிருகின்ற விடயம்.

மறுபுறத்தில் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் ஈழத்தமிழர்களை முன்னிலைப்படுத்தி கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசுக்கு ஏதாவது அழுத்தத்தைப் பிரயோகித்திருக்கிறதா என்று பார்த்தால் அங்கேயும் எதுவும் நடக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவை கொண்டுவருகின்ற தீர்மானத்தை, அத்தீர்மானம் வெளியாகி சூடாறும்முன்பே இலங்கை அரசு நிராகரித்துவிடும் போக்கைத்தான் இன்றைய அரசுகூட கடைபிடித்துவருகின்றது.

இவ்வாறு இலங்கை அரசு தீர்மானங்களை உடனடியாகவே நிராகரிப்பதனூடாக, அத்தீர்மானங்கள் வருடாந்தம் பலயீனப்பட்டுப் போவதைத்தான் அவதானிக்க முடிகின்றது. நிலமை இப்படியே நீடிப்பின் இன்னும் சில வருடங்களில் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையிலிருந்து இலங்கை விடயம் மறக்கப்பட்ட ஒன்றாக மாறிப்போகும்.

இந்த ஆபத்தினை ஈழத்தமிழர்கள் விளங்கிக்கொண்டு செயற்படுகிறார்களா? எனக்கேட்டால், இல்லை என்றே பதிலளிக்கத் தோன்றுகிறது. ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இனவழிப்புக்கு சர்வதேச நீதிகோரல் என்பது எப்போதும் விட்டுவிலகமுடியாத அரசியல் செயற்பாடுகளில் ஒன்று. இனவழிப்புக்கு நீதிகோரலின் ஊடாக ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளையும் அடைந்துகொள்ள வேண்டும். இனவழிப்புக்குத் தீர்வாக முன்வைக்கப்படும் பரிகார நீதியானது அரசியல் அபிலாசைகளை அடைதலே தவிர, நிவாரணம் பெறுதலல்ல. ஆனால் களத்திலும், புலத்திலும் நடப்பதெல்லாம் இதற்கு எதிர்மாறானதாகத்தான் இருக்கின்றது.

புலம்பெயர் தளத்தில் இயங்குகின்ற பல அமைப்புகள், வருடந்தோறும் ஐ.நா மனிதவுரிமைப் பேரவைக்கு செல்வதை, நல்லூர் திருவிழாவிற்குப் போவதைப் போல பயன்படுத்துகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரைக்கும் ஜெனிவாவுக்கு போவதென்பது கொண்டாட்டகரமானது. ஓய்வுக்காலத்தில் குடும்பமாக இணைந்து சுற்றுலா செல்வதைப் போல ஐ.நா மனிதவுரிமைகள் பேரவைக்கு சென்றுவருவதை வழக்கமாக்கியிருக்கின்றனர்.

இந்தக் கொண்டாட்டங்களுக்கு வலுச் சேர்ப்பதற்காகத் தாயத்திலிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சார்பில் ஒரு சிலரை அழைப்பதையும் நிகழ்ச்சி நிரலாக வைத்திருக்கின்றனர். அதற்காக ஒரு சில தாய்மார் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஐ.நாவுக்கு செல்லும் வாய்ப்பினை ஒரே தரப்பினருக்கே புலம்பெயர் அமைப்புக்கள் வழங்குகின்றன. இதனால் களத்தில் வலிந்து காணாமலாக்கப் பட்டோருக்கு நீதிகோரி போராடும் தாய்மாரிடையேகூட முரண்பாடுகள் உருவாகி யிருக்கின்றன. வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கங்கள் பிளவுபட்டிருக்கின்றன. இப்போது மாவட்டத்திற்கு இரண்டு சங்கங்கள் உருவாகியிருக்கின்றன. இந்த சங்கங்களை புலம்பெயர் அமைப்புகள் தம் அரசியல் நிகழ்ச்சிநிரல்களுக்கேற்ப பயன்படுத்திக்கொள்கின்றன.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தபட்டது இனவழிப்புத்தான் என்பதற்குத் தகுந்த சாட்சியங்களாக இருப்பவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட வர்களின் உறவினர்கள்தான். அவர்களையும் சிதைத்து, போராட்ட வலுமைப் புலம்பெயர் அமைப்புக்கள் குழப்பியிருக்கின்றன. வெளிநாட்டுப் பயணங்களையும், பொருள் உதவிகளையும், நிதி உதவிகளையும், நிவாரணங்களையும் ஒரு சில தாய்மாருக்கு மாத்திரமே வழங்கி, போராடும் தாய்மாரை அப்போராட்டங் களிலிருந்து விலகச் செய்திருக்கின்றனர். களத்தில் இடம்பெறும் போராட்டங்கள் தமது உத்தரவின்படி நடக்கவேண்டும் எனப் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிந்திப்பதன் விளைவுதான் இது.

ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் ஈழத்தமிழர் விடயத்தை வைத்து களத்திலும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் பிழைப்பு நடத்துகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் தன்னெழுச்சியாக நடத்துகின்ற அரச ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொண்டு, தாமே அந்தப் போராட்டங்களை நடத்துவதைப் போன்ற விளம்பரத்தைத் தேடிக்கொள்கின்றன. அந்த விளம்பரத்தை வைத்து, ஐ.நா மாதிரியான சர்வதேச அமைப்புகள், நாடுகளின் தூதரகங்கள் போன்றவற்றிற்கு திட்டங்களை சமர்ப்பித்து நிதியைப் பெற்றுக்கொள்கின்றன.

நிதியளிக்கும் நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு அமைவாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்கின்றன. இந்த அமைப்புகள் இனவழிப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதையே தவிர்த்து, நிதிக்கொடையாளர்கள் என்ன சொல்கிறார்களோ அதன் பின்னால் மக்களை அணிதிரளச் செய்கின்றன.


மேற்குறித்த இரண்டு தரப்பினரிடமும் சிக்கியிருக்கின்ற ஈழத்தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட – நிகழ்த்தப்படும் இனவழிப்பு எதிரான சர்வதேச நீதிக் கோரிக்கையானது கேலிக்கூத்துக்குள்ளாகியிருக்கின்றது. தம் சுயதேவைகளுக் காகவும், சுய தம்பட்டங்களுக்காகவும் ஈழத்தமிழர்களின் நீதிக் கோரிக்கைகளையும், அரசியல் அபிலாசைகளையும் இந்த அமைப்புக்கள் பலியாக்கிக்கொண்டி ருக்கின்றன.

கடந்த பதினைந்தாண்டுகளில் ஈழத்தமிழர்கள் மீது இன அழிப்புக்கு எந்த வகையான நீதியை, எந்த அமைப்பிடம் கோருவது என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியாத நிலையில்தான் இந்த அமைப்புகள் தேங்கி நிற்கின்றன என்பதுதான் இங்கிருக்கின்ற துயரமான உண்மை.

# தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல ஆஸிக்கும் முன்னோடி திராவிடமே!

**தமிழ்நாட்டில் ஆணவ படுகொலை தொடர்பாக சாதீயம் -(தீரா)விடம் என்ற தலைப்பில் கடந்த மாத இதழில் வெளியான கட்டுரைக்கு பதில ளிக்கும் வகையில் எதிரொலிக்கு அனுப்பப்பட்ட கட்டுரை.**

**● சுமதி-கன்பரா**



'ஜாதி ஆணவக் கொலைகள் பற்றிய விழிப்புணர்வு, அப்படி ஒரு நிகழ்வு நடக்கும் பொழுது மட்டுமே பேசு பொருளாகமாறுவதும், பின்பு அது மறக்கடிக்கப்படுவதும் வேதனைக்குரியது.' இந்தச் சொற்றொடர், பொதுவாக அரசியல் பேசும் மக்களுக்குப் பொருந்தும். ஆனால் இன்றளவும், ஒவ்வொரு நாளும், கிடைக்கும் இடங்களில் எல்லாம், கிடைக்கும் மேடைகளில் எல்லாம், கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தொடர் முயற்சிகளை முன்னெடுக்கும் தோழர்கள் ஏராளம். அதில் குறிப்பாக கம்யூனிஸ்ட் மற்றும் திராவிட இயக்கத் தோழர்கள் தான் அதிக எண்ணிக்கையில் ஈடுபடுகிறார்கள்.

தமிழ்நாட்டில், அதாவது பெரியார் பிறந்த மண்ணில் என்ன நடக்கிறது என்ற ஆதங்கம் மிக நியாயமானது. கம்யூனிசம் ஆளும் கேரள மண்ணில் என்ன நடக்கிறது என்று கூட ஆதங்கப்படலாம். அதிலும் நியாயம் உள்ளது. ஏனென்றால், முன்னரே குறிப்பிட்டது போல ஜாதி ஒழிப்பில், இந்த இரு இயக்கங்கள், கட்சிகள் தான் முன்னோடியாக இருக்கின்றன. குறிப்பாக திராவிட இயக்கங்கள். அப்படிப்பட்ட மாநிலங்களில் ஒரு ஜாதி ஆணவப் படுகொலை நிகழ்ந்தாலும் அது பெரும் பிரச்சினை தான். அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள் குறித்து சிந்திக்கத் தொடங்கும் முன், இந்தியாவில் எந்த மாநிலத்தில் ஜாதி ஆணவப் படுகொலைகள் அதிகமாக நிகழ்கின்றன என்ற தரவைத் தேடிப் பார்ப்பதில் சிக்கல் உள்ளது.

இந்தியா முழுவதிலும், எந்த மாநிலத்திலும் ஜாதி ஆணவப் படுகொலைக்கு எதிரான தனிச் சட்டம் இல்லை. அதனால் பல தன்னார்வச் செயற்பாட்டாளர்கள் கொடுக்கும் தரவுகளையே ஆதாரமாகக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. அந்த வகையில் ஜாதி ஆணவப் படுகொலைகள் அதிகமாக பதிவான மாநிலங்கள் ஹரியானா, உத்தரபிரதேசம், ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப். ஆக பெரியார் மண்ணோ, கம்யூனிச மண்ணோ மட்டுமில்லை, வட மாநிலங்களை விட தென் மாநிலங்கள் கொஞ்சம் முற்போக்காகவே உள்ளன என்பது சற்று ஆறுதலைக் கொடுக்கிறது.

பெரியார் மண்ணில் 60 ஆண்டு கால ஆட்சியில் இடைநிலை ஜாதிகளுக்கும் தலித்துகளுக்கும் இடையில் இருக்கும் ஜாதிப் பாகுபாடு களையப்பட்டுள்ளதா என்ற கேள்வியைத் தொடர்ந்து, பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பினால், பார்ப்பனர்கள் மேற்கத்திய நாடுகள் மற்றும் மற்ற மாநிலங்களில் குடியேறியதையும், திராவிடக் கட்சிகள் பார்ப்பனர்களை அரசியலில் இருந்து அகற்றி அந்த இடத்தை இடைநிலை ஜாதியை கொண்டு நிரப்பியதையும் தவிர வேறு என்ன சாதித்திருக்கிறது என்ற கேள்வி பிரதானமாக பலருக்கு எழுவதைக் காண முடிகிறது. கடைசியாக எப்போது பார்ப்பனர்கள் ஜாதி மோதலில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற கேள்வியும் கூடவே தொக்கி நிற்கிறது.

ஒவ்வொரு கேள்விக்கும் விடை தேடுவோம்.

கடைசியாக பார்ப்பனர்கள் ஜாதிய மோதலில் ஈடுபட்டது, மே 12, 2025. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில். வட கலைக்கும் தென்கலைக்கும் கைகலப்பு. அதைவிட சுவாரஷ்யமான, இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்த சம்பவம் ஒன்றுள்ளது. ஷங்கர்ராமன் கொலை வழக்கு. கைது செய்யப்பட்டவர் ஜெயேந்திரர். 'அட என்ன ஓய்! இது எப்படி என் கேள்விக்கு பதிலாகும்?' என்று நீங்கள் கேட்பது புரிகிறது. இடைநிலை ஜாதிகளும் பட்டியலின ஜாதிகளும் புழங்கும் நெருக்கம் வேறு, பார்ப்பனர்கள் மற்றும் பார்ப்பனர் அல்லாதோர் புழங்கும் நெருக்கம் வேறு. ஒரு அக்ரஹாரத்தில், ஒரு தலித் இல்லை, ஒரு இடைநிலை ஜாதிக்கு கூட வீடு கிடைக்காது. இன்றளவும் பெரும் நகரங்களிலேயே பார்ப்ப னர்கள் இருக்கும் அடுக்கு மாடி வீடுகளில் பார்ப்பன ரல்லாதோருக்கு வீடு கிடைப்பது மிகக் கடினம்.

2016 ஆம் ஆண்டு ஸ்வாதி என்ற பார்ப்பனப் பெண் கொலை செய்யப்பட்டதை அடுத்து ராம்குமார் என்ற அப்பாவி இளைஞன் கைது செய்யப்பட்டு சிறையில் கொலை செய்யப்பட்டான். அந்த வழக்கில் உண்மையான குற்றவாளி யார் என்று இன்றைக்கு வரைக்கும் தெரியாது. அப்போது எழுந்த சந்தேகங்களில் ஒன்று அது ஆணவப் படுகொலை என்பது. தவறான குற்றவாளி தண்டிக்கப்பட்டதற்கான அத்தனை சாட்சியங்கள் இருந்த போதும் உண்மையான குற்றவாளியை ஏன் கண்டுபிடிக்கவில்லை என்று ஸ்வாதியின் பெற்றோர் என்றாவது வாய் திறந்திருக்கிறார்களா? ஒருவேளை உண்மையாகவே தங்கள் மகளைக் கொன்றவன் தண்டனை பெற வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர் இப்படி அமைதி காப்பார்களா?

பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பை அடுத்து பார்ப்பனர்கள் மற்ற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந் தார்கள். எந்தப் பார்ப்பனராவது வாழ வக்கற்று, எங்கு போகிறோம், எங்கு வேலை செய்யப் போகிறோம், தங்க வீடு கிடைக்குமா என்று குடிபெயர்ந்த சம்பவம் எதனையும் கேள்விப்பட்டதுண்டா? இன்று பல கிராமங்களில் கோவில்கள் சிதிலமடைந்திருப்பதற்கு முக்கியமான காரணம், கோவிலை விட நகரங்களுக்கு சென்று பணியில் சேர்ந்தால் நிறைய பணம் சம்பாதிக்கலாம் என்று கோவிலை கைவிட்டு நகரங்களுக்கு புலம்பெயர்ந்த பார்ப்பனர்கள் தான் என்று தமிழ் பண்பாட்டு ஆராய்ச்சியாளரான தொ. பரமசிவன் குறிப்பிடுகிறார். இல்லை என்று மறுப்பவர்கள் உண்டா? கோவிட் சமயத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் நடைபயணம் மேற்கொண்டு தங்கள் கிராமங்களுக்கு திரும்பியவர்களில் எத்தனை பேர் பார்ப்பனர்கள்? அன்றும் இன்றும் என்றும் பார்ப்பனர்கள் அதிக வசதி வாய்ப்பை தேடித்தான் புலம்பெயர்ந்துள்ளார்கள்.

பார்ப்பனர்களை அரசியலில் இருந்து அகற்றி அந்த இடத்தை இடைநிலை ஜாதியைக் கொண்டு நிரப்பியதைத் தவிர வேறு என்ன சாத்திருக்கின்றன திராவிடக் கட்சிகள்? மிக அறம் சார்ந்த கேள்வி.

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல ஆஸிக்கும் முன்னோடி திராவிடமே!

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

2000 ஆண்டு காலமாக வளர்ந்து நிற்கும் ஜாதியை வெட்டி வீழ்த்தும் திறன் திராவிடக் கட்சிகளுக்கு இருக்கிறது என்ற ஆதங்கத்தில் கேட்கப்பட்ட கேள்வியாகவே இதை எடுத்துக் கொள்ளலாம்.

மதுரையைச் சேர்ந்த எவிடென்ஸ் எனும் NGO ஆணவ கொலைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுள்ளது. அதைக் குறிப்பிட்டு பேசும் பொழுது, அதன் நிறுவனர் எவிடென்ஸ் கதிர் தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். ஒருமுறை ஒரு பெரும் கலவரத்திற்கு பின்பு வெயிலடிச்சான்பட்டி என்ற கிராமத்திற்கு செல்கிறார். அங்கு இரண்டு குடியிருப்புகள் இருக்கின்றன. ஒன்று நல்ல வசதியான குடியிருப்பு மற்றொன்று மிக ஏழ்மையான குடியிருப்பு. மிக ஏழ்மையான குடியிருப்பு தான் தலித்துகள் வாழும் குடியிருப்பு என்று கருதி அங்கு சென்ற கதிருக்கு, அங்கு இருக்கும் ஒரு பெண் தண்ணீர் கொடுத்து ‘ தைரியமா குடிங்க நாங்க ஒன்னும் SC வீட்டு ஆளுங்க இல்லை’ என்றார்.

ஜாதியில் ஒடுக்கப்பட்ட மக்கள், தங்களை விட ஜாதிய அடுக்கு முறையில் மேல் இருக்கும் மக்களை விட வளமாக இருப்பதன் காரணம், இந்தத் திராவிடம் கொண்டு வந்த மாற்றம் தான். இல்லை என்று மறுப்பவர்கள், 1967 க்கு முன்பு அந்தப் பகுதியில் வாழ்ந்த தலித்துகளின் பொருளாதார நிலை எப்படி இருந்தது என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். பெரியாரின் திராவிடர் கழகமும், திராவிட மாடல் அரசும் தலித் மற்றும் இடைநிலை ஜாதிகளுக்கிடையே வேறுபாட்டை களைய முன்னெடுத்த நடவடிக்கைகளைப்பார்க்கலாம்:


பெயர்களுக்கு பின்னால் இருக்கும் ஜாதி உபயோகத்தை தவிர்ப்பது.

- 3% அருந்ததியினருக்கான உள் ஒதுக்கீடு
- தலித்துகள் அதிகம் ஈடுபட்ட மனிதனை மனிதன் இழுக்கும் கை ரிக்க்ஷாவை ஒழித்தது . அதனால் வாழ்வாதாரத்தை மக்கள் இழந்து விடக் கூடாது என்று சைக்கிள் ரிக்ஷா கொண்டுவரப்பட்டது.
- குடிசை மாற்று வாரியம் அமைத்தது
- விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயம்
- உயர் படிப்பு வரை மாணவர்களுக்கு இலவசக் கல்வி
- கலப்பு மணத் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகை
- அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று அறிவிப்பினை வெளியிட்டது மற்றும் பணி ஆணை களை வழங்கியது.
- பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கான கல்வித் தொகை உயர்த்தப்பட்டது. அவர்களுக்கான விடுதிகள் அதிகமாகத் திறக்கப்பட்டன.
- பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 சதவீதம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது
- அனைத்து சமூகத்தினரும் சேர்ந்து வாழும் வகையில் சமத்துவபுரங்கள் தமிழகமெங்கும் உருவாக்கப்பட்டன
- ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரப்பட்டன.

ஜாதி எப்படி உருவாகியது, மக்களால் எப்படி, எதற்காக பின்பற்றப்படுகிறது, அதை எப்படி ஒழிப்பது என்பதற்கு அம்பேத்கரின் ‘ஜாதியை அழித்தொழிப்பது எப்படி?’ என்ற நூலைப் படித்தால் புரிந்து கொள்ளலாம். ஜாதியை அழித்தொழிக்க வேண்டுமென்றால், ஜாதியைத் தூக்கிப் பிடிக்கும் ஹிந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்கிறார். சொன்னதோடு மட்டுமல்லாமல், புத்த மதத்திற்கும் மாறினார். அம்பேத்கரை விடவும் ஜாதியைப் பற்றி ஆராய்ந்த அறிவாளிகள் உலகில் இருக்கிறார்களா என்ன!

அம்பேத்கரின் அந்த நூலை முதன்முதலில் வெளியிட்டது தமிழ் நாடு தான். தந்தை பெரியார் தான். தந்தை பெரியாரின் போராட்டமும் ஹிந்து மதத்தை எதிர்த்து தான். அதன் உச்சாணிக் கொம்பில் அமர்ந்திருக்கும் பார்ப்பனர்களை எதிர்த்து தான். தந்தை பெரியார் பார்ப்பனர்கள் மேல் வைத்த விமர்சனங்களுக்கு சற்றும் குறைவில்லாமல் டாக்டர் அம்பேத்கரும் வைத்திருக்குகிறார்.

வெறும் பார்ப்பன எதிர்ப்பை மட்டுமே பேசி திராவிட கட்சிகள் ஆட்சிக்கு வந்தன என்பவர்கள் அறிஞர் அண்ணாவின் மேடைப் பேச்சுகளையோ கலைஞரின் மேடைப் பேச்சுகளையோகேட்டவர்களில்லை என்றே அனுமானிக்க வேண்டியதாக இருக்கிறது. உலக அரசியலை சாமானிய மக்களிடம் கொண்டு சேர்த்த கட்சி. ஒன்றிய அரசு என்னும் பெயரில் மாநில அதிகாரங்களை சுரண்டும் மைய அரசியல் பற்றிப் பேசிய கட்சி. திராவிட'ர்' இருந்து திராவிடமாக ஏன் மாறியது என்ற வரலாறையாவது படிக்கலாம்.



அருப்புக்கோட்டையில் வாழும் தலித் ஒருவர், அரசு ஆசிரியர் பள்ளி வேலையை விட்டுவிட்டு தொழில் தொடங்கியுள்ளார். அங்கு சில வடநாட்டுத் தொழிலாளிகள் பணிபுரிகிறார்கள். அவர்கள் பணியில் சேர்ந்த சில நாட்கள் கழித்து அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள கொஞ்சமாகப் பேச்சுக் கொடுத்துள்ளார். அவர்கள் அனைவரும் இடைநிலை ஜாதியைச் சேர்ந்தவர்கள். இவர் ஒரு தலித் என்று அறிந்ததும், அந்தப் பணியாளர்கள் வாயடைத்துப் போயிருக்கிறார்கள். ‘எங்கள் ஊரில் தலித்துகள் ஒரு நல்ல வீடு கட்டக் கூட அனுமதிக்கப்பட மாட்டார்கள். நீங்கள் எப்படி தொழில் தொடங்கி அதில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நடத்தி வருகிறீர்கள்?’ என்றும் கேட்டிருக்கிறார்கள். இது தான் பெரியார் மண் சாதித்தது.


திராவிட அரசியல் தான் சரியானது என்று யாரும் இங்கு வாதிடவில்லை. ஜாதி ஒழிப்பில் திராவிட மாடல் அரசு மிக பின் தங்கி இருக்கிறது. அதில் மாற்றுக் கருத்தில்லை. ஜாதி ஒழிப்பில் முன்பு இருந்த வீரியம், வாக்கு அரசியலால் நீர்த்துப் போய்க் கொண்டிருக்கிறது. திராவிட ஆட்சி மேல் நேர்மையான விமர்சனங்களை வைப்பவர்களுக்கு துணை நிற்கலாம். வெறும் திராவிட ஒவ்வாமையால், வரலாறைப் படிக்காமலோ அல்லது வரலாறை மாற்றி அமைக்க நினைப்பவர்களோ சங்கி கூட்டத்திற்கு சிறிதும் சளைத்தவர்கள்அல்லர் என்றே கருத வேண்டியதாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் திராவிடம் விதைத்த விதை தான் இன்று ஆஸ்திரேலியாவிலும் வேர்விட்டு வளர்ந்து நம்மைக் காத்து நிற்கிறது. பெரியார், அம்பேத்கர் சிந்தனை வட்டம், ஜாதிக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுப்பதுடன் மட்டும் நிற்காமல் ஜாதிப் பாகுபாட்டுக்கு எதிரான சட்டம் இயற்ற தன்னால் இயன்றதைச் செய்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிலும் சரி, ஆஸ்திரேலியாவிலும் சரி, திராவிடம் அல்லாத வேறு எந்த இயக்கம் தங்களை ஜாதி ஒழிப்பில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறது?

ஜாதி ஒழிப்பில், இந்தியாவிற்கு மட்டுமில்லை ஆஸ்திரேலியாவிற்கும், முன்னோடி திராவிடம் தான்.




தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284






# மனிதப்புதைகுழிகளைத் தேடும் அரசு

● பிருந்தாபன். ஜெ

இலங்கையின் தமிழர் தாயகப் பகுதிகள் முழுவதும் பல்வேறு மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. இன்னமும் அடையாளம் காணப்படாமல் மறைந்திருக்கின்றன. அடையாளம் காணப்பட்டும் கண்டுகொள்ளப் படாதிருக்கின்றன. அந்தவகையில் வடக்கு, கிழக்கில் மாத்திரம் இதுவரையில் 10 இற்கும் மேற்பட்ட மனிதப்புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதில் முதலாவது செம்மணி மனிதப் புதைகுழி ஆகும். 1996ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை அரசு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து வகைதொகையற்ற கணக்கில் தமிழ் இளையோர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர். விசாரணைக்கென வெள்ளை வான்களில் ஏற்றிச்செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் யாரும் வீடு திரும்பவில்லை. இந்த இளைஞர்கள் அனைவரும் கொன்று புதைக்கப்பட்டுவிட்டனர் என்கிற தகவல் கிருசாந்தி படுகொலை வழக்குத் தீர்ப்புடன் வெளியாகியது. அவ்வாறு கடத்தப்பட்ட, கைதுசெய்யப்பட்ட, அழைத்துச்செல்லப்பட்டவர்களின் எலும்புக்கூடுகள் பல 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவ்வாறு 15 வரையான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதோடு செம்மணி அகழ்வு நிறுத்தப்பட்டது. மீட்கப்பட்ட 15 எலும்புக்கூடுகளுமே பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களாலும் அடையாளம் காணப்பட்டன.

அதன் பின்னர், 2013ஆம் ஆண்டு திருக்கேதீச்சர ஆலயத்திற்கு அண்மையில் நீர்ப்பாசன அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகளை அமைக்கும்போது மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற அகழ்வின்போது 80 வரையான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. பொதுமக்களுடையவையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட இந்த எலும்புக்கூடுகளின் தொகுதியானது இரசாயனப் பகுப்பாய்விற்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டது. அத்தோடு இந்த மனிதப் புதைகுழி பற்றிய செய்திகள் அடங்கிப்போயின.

கடந்த 2018 ஆம் ஆண்டு மன்னாரின் நகரப் பகுதியில் சதொச கட்டட அமைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற அகழ்வாய்வின்போது 350 க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. 1999ஆம் ஆண்டுக்கு முன்பு மன்னார் தீவுப் பகுதிக்குள் இடம்பெயர்ந்து வந்த தமிழ் மக்களினுடையதாக இந்த எலும்புக்கூடுகள் இருக்கலாம் என்றும், மன்னார் பகுதியில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என்றும் மக்கள் சந்தேகமடைந்தனர். ஆனால் அவற்றை அமெரிக்க நிறுவனத்திற்கு அனுப்பி இரசாயனப் பகுப்பாய்வு செய்தபோது, 14ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரியனவாக காலக் கணிப்பு செய்யப்பட்டது. இதனால் இந்த எலும்புக்கூடுகள் சங்கிலிய மன்னன் கிறிஸ்தவ மதமாற்றத்திற்குள்ளானவர்களைப் படுகொலைசெய்து புதைத்தாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த முடிவில் கூட பலத்த சந்தேகம் இருந்தது. ஆயினும் இதற்குப் பிறகு அகழ்வுகள் இடம்பெறவில்லை. தற்போது மன்னார் நகரின் குப்பைகள் கொட்டப்படும் பகுதியாக இந்தப் புதைகுழி காட்சியளிக்கின்றது.

2023ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் நீர்ப்பாசனக் குழாய்களைப் புதைப்பதற்கான பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அரச பணியாளர்கள், அங்கே மனித எலும்புக்கூடுகள் மேல்வருவதை அவதானித்தனர். அதனையடுத்து பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இடம்பெற்ற மனிதப் புதைகுழி அகழ்வின்போது, 52 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த மனித எலும்புக்கூடுகளோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளது எனச் சந்தேகிக்கப்படும் ஆடைகள், தகடுகள், துப்பாக்கி ரவைகள் போன்றன மீட்கப்பட்டன. முறைப்படியாக அல்லாமல் திறந்த குழியொன்றின் மீது கொல்லப்பட்டவர்களை தூக்கி வீசியது போலவும், உயிரோடு குழிகளுக்குள் இட்டு துப்பாக்கியால் சுட்டதைப்போன்றதுமான மனித எலும்புக்கூடுகள் காணப்பட்டன. இவை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மணலாறு இராணுவ முகாம் தாக்குதலின்போது கொல்லப்பட்டவர்களின் சடலங்களாக இருக்கலாம் என அகழ்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு இந்த அகழ்வுக்குழிகளிலிருந்து மீட்கப்பட்ட தடயப்பொருட்களைப் பொதுமக்கள் அடையாளம் காண்பதற்கான விளம்பரப்படுத்தல்களும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி மயான கட்டுமானப் பணியின்போது மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இரண்டு கட்டங்களாக 54 நாட்கள் இடம்பெற்ற அகழ்வாய்வின்போது 240 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் விளையாடும் பொம்மை, பாடசாலைப் பை, வளையல்கள், காலணிகள், துணி, இறப்பர் மாலைகள் எனப் பல தடயப்பொருட்களும் இங்கு கிடைத்துள்ளன. இலங்கையிலேயே இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாகவும் இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதைகுழியில் அதிகளவில் சிறுவர்களினுடையவை எனச் சந்தேகிகப்படும் மனித எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த ஐந்து மனிதப்புதைகுழிகளும் வடமாகாணத்தில் உள்ளன. இந்தப் புதைகுழிகளில் தமிழர்களே கொன்று புதைக்கப்பட்டுள்ளனர் என்பதற்கும், இவ்வாறு கொன்று புதைத்தவர்களாக இராணுவத்தினரே இருப்பர் என்பதற்கும் வலுவான சான்றுகளும் உண்டு. இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்கள், வெள்ளைவான்களில் கடத்தப்பட்டவர்கள், விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டவர்கள் இந்தப் புதைகுழிகளில் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்கிற விடயமும் வலுவாக நம்பிக்கைக்குரியதாக மாறிவருகின்றது. எனவே இந்தப் புதைகுழிகள் தமிழ் இனப்படுகொலைக்கான சான்றாதாரங்களாகக் கொள்ளத்தக்கவை என்ற ரீதியிலும், இந்தப் புதைகுழிகள் விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிட்டு, அகழ்வுகளில் பங்குற்றி, தமிழ் இனவழிப்பிற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்கிற விடயத்தை தமிழ் அரசியல் தரப்புகள் வலியுறுத்தி வருகின்றன. மனிதப் புதைகுழிகளின் தன்மை, அங்கு புதைக்கப்பட்டிருக்கும் எலும்புக்கூடுகளின் தன்மை ஆகியவற்றை வைத்து சர்வதேச சமூகமும் தனது கரிசனைகளை இதுவிடயத்தில் வெளிப்படுத்தி வருவதை அண்மையில் வெளியான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரின் அறிக்கையிலும் பார்க்கக்கிடைத்தது.

இந்நிலையில் இராணுவத்தரப்பு மாத்திரம் இலங்கையில் மனிதப் புதைகுழிகளோடு தொடர்புபடவில்லை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புண்டு என்கிற கோணத்தில் சில அரசியல் வித்தைகளை தேசிய மக்கள் சக்தி அரசு வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கின்றது.

அந்த அரசியல் கோமாளித்தனத்தின் முதற்தொடக்கமாக துணுக்காய் மனிதப் புதைகுழி காட்டப்படுகின்றது. இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியிலும், அதற்குப் பின்னரும் தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள், துணுக்காய்க்கு கொண்டுவரப்பட்டு அங்கு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, கொன்று புதைக்கப்பட்டார்கள் என்கிற கதையை ஈழத்தமிழ் இலக்கியவாதிகளில் ஒரு தரப்பினர் நீண்டகாலமாக சொல்லி வருகின்றனர். ஆனால் அதற்கான வலுவான சான்றுகள் எவையும் அந்தக்குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் எவரிடமும் இல்லை. வாய்வழிக்கதையாக இந்தக் குற்றச்சாட்டு உலாவி வந்தது. அண்மைக்காலமாக இலங்கை அரசின் புலனாய்வுக் கட்டமைப்பானது, தமிழ் சமூகத்தினுள் ஆழமாக இறங்கி வேலைசெய்கின்றது. புலனாய்வுத் தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டு இயங்கக்கூடிய தரப்பினரை வைத்து இலங்கை அரசு தமிழ் மக்கள் மத்தியில் செய்யவேண்டிய பல வேலைகளையும் செய்துவருகின்றது. தமிழ்ச் சமூகத்தினுள் பிளவுகளை ஏற்படுத்துவது, வன்முறைகளை தூண்டுவது, குற்றச்செயல்களைத் தூண்டுவது, சாதியப் பிரச்சினைகளைத் தூண்டுவது, போதைப்பழக்கத்திற்கு அடிமையாக்குவது எனப் பலவேலைகளை இந்தத் தரப்பினரை வைத்து சாதிக்கின்றனர். தற்போது அரசுக்கு சவாலாக மாறிவருகின்ற மனிதப்புதைகுழி விடயத்தினையும் இத்தகைய புலனாய்வுத்துறையின் அனுசரணையில் இயங்குகின்ற தரப்புகளைக் கொண்டு கையாளத் தொடங்கியிருக்கின்றனர். அதனடிப்படையில் சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி துணுக்காய் மனிதப் புதைகுழி விடயத்தை வெளிக்கொணர்கிறோம் என உள்ளூர் மக்களுடன் முரண்பட்டு, அதனை காணொலிகளாக வெளியிடுகின்றனர். ஆனால் உள்ளூர்வாசிகளோ மனிதப் புதைகுழி என அடையாளப்படுத்தப்படும் இடத்தில் தாமறிந்த காலம் தொட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் நெல் உற்பத்தி நிலையமும், பொதுமக்களின் விளையாட்டு மைதானமும் மாத்திரமே இருந்தாக ஆதாரபூர்வமாகக் கூறிவருகின்றனர்.

மறுபுறம் கிழக்கு மாகாணத்தில் முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைந்து செயற்பட்ட காலத்தில் மேற்கொண்டதாக சொல்லப்படும் குருக்கள் மடம் மனிதப் புதைகுழியை அகழவேண்டும் என்கிற கோரிக்கைகளும் முன்வைக்கப்படுகின்றன. வடக்கில் எங்காவது மனிதப் புதைகுழி அகழப்படும் செய்திகள் வெளிவரத் தொடங்கிய உடனேயே கிழக்கின் குருக்கள் மட மனிதப் புதைகுழியையும் அகழவேண்டும் என்கிற கோரிக்கைகள் எழுவது பொதுப்போக்காகவே இதுவரை இருந்து வந்தது. ஆயினும் இதுவரையான அரசுகள் குருக்கள்மட மனிதப் புதைகுழி விடயத்தைப் பெரிதாகக் கணக்கிலெடுக்கிவில்லை. அந்த அரசுகளோடு முரளிதரன் எனப்படும் கருணா நெருக்கமானவராகக் காணப்பட்டமையால் அதனை அகழ்வதில் ஆர்வம் காட்டப்படவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசு குருக்கள் மட மனிதப் புதைகுழியையும், அதேபோல பிள்ளையான் தரப்பினர் கடத்திக்கொன்று புதைத்த புதைகுழிகளையும் அகழ்வதில் ஆர்வம் காட்டிவருகின்றது. கடந்த வாரம் குருக்கள் மடப் புதைகுழி பகுதிகளை பார்வையிட்ட நீதியமைச்சர் ஹர்சண நாணயக்கார, தாம் அனைத்து மனிதப் புதைகுழிகளையும் அகழ்வோம் எனச் சூளுரைத்திருக்கிறார்.

சமநேரத்தில் திருகோணமலையின் சம்பூர் பகுதியில் மிதிவெடி அகற்றல் பணிகளின்போது மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனை அகழ்வதற்கான நிதிக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும், அதற்கு அரசு இன்னமும் பதிலளிக்கவில்லை. யாழ்ப்பாணத்தின் மண்டைதீவுப் பகுதியில் 1990ஆம் ஆண்டு இராணுவம் கைதுசெய்த 158 பேரைக் கொன்று அங்குள்ள கிணறு ஒன்றில் புதைத்தது என்றும், அந்தப் புதைகுழிகளை அகழவேண்டும் என்றும் மிக நீண்டகாலமாகவே கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் இந்தப்படுகொலையின் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டபோதும்கூட இது வலியுறுத்தப்பட்டதோடு, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் இந்த மனிதப் புதைகுழியை அகழக்கோரி முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டுள்ளது. இதே காலப்பகுதியில் மண்டைதீவில் சர்வதேச விளையாட்டரங்கம் அமைக்க ஆர்வம் காட்டிவரும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அப்பகுதிக்கு வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றார். அப்போதும் சரி, அதற்குப் பிறகும் சரி அவரோ அல்லது அரசோ மண்டைதீவு மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து மண்டைதீவு மனிதப்புதைகுழி அகழ்வு குறித்து வாய்திறக்கவில்லை. அரசின் மீது மனிதப்புதைகுழி விடயத்தில் ஏற்படும் அழுத்தத்தையும், இராணுவத்தின் மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளையும் தவிர்ப்பதற்கு இல்லாத மனிதப் புதைகுழிகளை மாத்திரம் அரசு தேடிக்கொண்டிருக்கிறது.


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146



# சிங்களத்தை சிக்கவைத்திருக்கும் சோமரத்ன ராஜபக்ச

● சுகந்தன் இரத்தினம்

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையின் சாட்சியாக செம்மணி மனிதப் புதைகுழி பார்க்கப்படுகின்றது. இப்படி தமிழ் இனவழிப்பின் சாட்சியமாகக் கிடக்கும், யாழ்ப்பாணத்தின் வரவேற்பு வளைவிடத்தினை ஒரு மனிதப் புதைகுழி வெளியாக உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் சோமரத்ன முதியன்சலாகே இராஜபக்ச.

பாடசாலை மாணவியான கிருசாந்தி குமாரசுவாமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்த வேண்டும் என்கிற நோக்கோடு வழிமறித்து, கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்த முதலாவது குற்றவாளியே இந்த சோமரத்ன முதியன்சலாகே ராஜபக்ச. மாணவி கிருசாந்தியை மாத்திரமல்லாது அவரைத் தேடிவந்த தாயார், சகோதரன், அயல்வீட்டார் என மூவரையும் கொலைசெய்யக் காரணமாக இருந்தவரும் இவரே. இதனால்தான் மாணவி கிருசாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியாக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டார்.

இவ்வாறு மாணவி கிருசாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியாக சோமரத்ன முதியன்சலாகே ராஜபக்ச நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டமைதான் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் மிக முக்கியமான திருப்புமுனை. சரி, நீதிமன்றத் தீர்ப்பளிப்பின்படி தான் குற்றவாளிதான் என ஒப்புக்கொண்டபடி, சோமரத்ன அமைதியாக சிறைக்கு சென்றிருப்பின் செம்மணி மனிதப் புதைகுழி என்கிற விடயமே அறியப்படாது போயிருக்கும். ஆனால் நீதிமன்றத் தீர்ப்பளிப்பின் பின்னர் சோமரத்ன ராஜபக்சவை நோக்கி நீதிபதி, ”நீங்கள் எதையாவது சொல்ல விரும்புகிறீர்களா?” எனக் கேட்டபோதுதான் அவர் செம்மணி தொடர்பான மர்மங்களை உடைத்தார்.

“இந்தக் கொலைகளுக்கெல்லாம் நாங்கள் பொறுப்பில்லை. இதற்கெல்லாம் பொறுப்பானவர்கள் எங்களை சிக்கவைத்துவிட்டுத் தப்பித்துவிட்டனர். பெரிய பதவிகளில் இருக்கும் அவர்கள் கொலைசெய்துவிட்டும், குறை உயிராகவும் தந்த 400 பேர் தொடக்கம் 600 பேரை செம்மணியில் புதைத்தோம். அவ்விடங்களை என்னால் இனங்காட்டவும் முடியும்” என நீதிமன்றத்தில் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச போட்டுடைத்தார். அதன் பின்னரே செம்மணி மனிதப் புதைகுழி திறக்கப்பட்டது. சர்வதேச சமூகத்தின் கண்காணிப்புடன் அகழப்பட்டது.

1996ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து 1999ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி வரை மிக முக்கியமான பேசுபொருளாக இருந்த செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தை உலகின் முன் கொண்டுவந்தவர், மாணவி கிருசாந்தி கொலைவழக்கின் பிரதான குற்றவாளி சோமரத்ன ராஜபக்சவே. அவரை சாட்சியாக வைத்துக்கொண்டே, செம்மணி மனிதப் புதைகுழியின் வரைபடம் உருவாக்கப்பட்டது. செம்மணி வெளியில் 26 இடங்களில் புதைகுழிகள் இருப்பதாக அவர் அடையாளப்படுத்தி, திகிலை ஏற்படுத்தினார்.

இவ்வாறு வேறொரு வழக்கின் குற்றவாளியாக சோமரத்ன ராஜபக்ச, தன் இராணுவம் தமிழர்களுக்கு எதிராகப் புரிந்த இனவழிப்பினைக் காட்டிக்கொடுப்பது இலங்கை வரலாற்றில் இதுவே முதல்தடவை. இந்த முடிவை எடுத்தமைக்காக அவர் சிங்கள மக்களாலும், இனவாதிகளாலும் மோசமாக விமர்சிக்கப்பட்டார். சிறைக்குள்ளேயே தாக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டார். இதையெல்லாம் எதிர்பார்த்து சோமரத்ன ராஜபக்ச இராணுவத்தைக் காட்டிக்கொடுத்திருக்க வாய்ப்பில்லை. அதேவேளை தமிழர்களுக்கு பெரிய அழிவுகளைச் செய்துவிட்டேன். எனவே புரிந்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் தேடவேண்டும் என்கிற குற்றவுணர்வினாலும் தன் இராணுவத்தைக் காட்டிக்கொடுத்திருக்க வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. அவருக்கு முன்பாக அத்தருணத்தில் இருந்தது ஒரே காரணம்தான். இவ்வளவு கொலைகளையும் புரிந்துவிட்டு, புதைக்கச் சொல்லி கட்டளையிட்டுவிட்டுப் பெருந்தலைகள் எல்லாம் தேசிய வீரர்கள் போல வெளியில் உலாவர, தான் மட்டும் ஏன் கம்பிக்கூண்டுக்குள் செல்லவேண்டும் என்கிற கோபத்தின் வெளிப்பாடுதான் அந்தக் காரணம்.

இதுவே குறித்த நீதிமன்றத் தீர்ப்பளிப்பில் சோமரத்ன ராஜபக்சவிற்கு பிணை வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது சில வருடகால தண்டனையளிக்கப்பட்டிருந்தாலோ அவர் செம்மணியின் குற்றவாளிகளைக் காட்டிக்கொடுத்திருப்பாரா? இவ்வளவு பெரிய மனிதப் புதைகுழி அங்கு இருப்பதை சொல்லியிருப்பாரா? இல்லைத்தானே. இராணுவக் கட்டமைப்பே இணைந்து மேற்கொண்ட பாரிய குற்றச்செயல் ஒன்றிற்குத் தான் மாத்திரம் தண்டிக்கப்படக்கூடாது. அதற்காக தன் உயிரையே பணயம் வைத்தார் சோமரத்ன ராஜபக்ச. அவரின் துரதிர்ஷ்டமும், இலங்கையின் நீதித்துறையின் பலவீனமும், சோமரத்ன எதிர்பார்த்த எதையுமே அடையவிடவில்லை. செம்மணி மனிதப் புதைகுழியின் பிரதான குற்றவாளிகள் யார் என்பது கண்டுபிடிக்கப்படாமலேயே வழக்கு நீதிமன்றங்களுக்குள் சிக்கி சீரழிந்தது. அப்படியே காணாமலும் போனது. சோமரத்ன ராஜபக்ச குற்றஞ்சாட்டிய இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வும், புகழும் மாத்திரம் அதிகரித்தது.

இப்படியாக கடந்த 29 வருடங்களாகத் தீர்க்கப்படாத செம்மணி வழக்கில் தோற்றுப்போய் இருந்தது பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மாத்திரமல்ல சோமரத்ன ராஜபக்சவும்தான்.

தம்மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்புக்கு நீதி தர யாருமில்லை. இப்படியே மிகுதிக் காலத்தை வாழ்ந்துவிட்டுப் போவோம் அல்லது புலம்பெயர்ந்துவிடுவோம் என விரக்தியுற்றிருக்கும் தமிழர்களுக்கு மனிதப் புதைகுழிகள் புதிய நம்பிக்கையைத் தந்துவிடுகின்றன. தமிழர்கள் தமக்கு நீதி வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்து, மனிதப் புதைகுழிகளை அடையாளம் காட்டி, நீதிமன்றத்தை நாடி இதுவரை எந்த மனிதப் புதைகுழிகளும் அகழப்படவில்லை. இயல்பான - இயற்கையான போக்கில் ஏதோ ஒரு தேவைக்காக நிலம் அகழப்படும்போது மனித எலும்புக்கூடுகள் மேல்வருகின்றன. அந்த மனித எலும்புக்கூடுகள் அடுத்த கட்டங்கள் நோக்கி ஈழத்தமிழர்களை வழிநடத்துகின்றன. இங்கு நடந்திருப்பது இனவழிப்புத்தான். இதற்கு நீதி தாருங்கள் என நிலம் கிழித்து மேற்கிளம்புகின்றன. திருக்கேதீச்சரம், மன்னார், கொக்குத்தொடுவாய், சித்துப்பாத்தி என அனைத்து மனிதப் புதைகுழிகளும் அகழப்பட்ட வரலாறு இப்படித்தான் இருந்தது.

இப்போது செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியும் அதே வரிசையில்தான் நிற்கிறது. இந்த மயானத்தை வைத்து தமிழர்கள் இங்கு நடந்திருப்பது இனவழிப்பே தான். அதற்கு சர்வதேச நீதி வேண்டும் என்கிற கோரிக்கையை மீளக் கையிலெடுத்துள்ளார்கள். எனவே தமிழர்கள் முன்னெடுத்துச்செல்லவேண்டிய அரசியலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழிநடத்தத் தொடங்கியிருக்கின்றது.

மறுபுறத்தில் மீண்டும் சோமரத்ன ராஜபக்ச வெளியே வருகின்றார். செம்மணி மனிதப் புதைகுழி விடயம் மீண்டும் பேசுபொருளாகிய நிலையில், செம்மணி மனிதப் புதைகுழியை உலகிற்கு அடையாளப்படுத்திய சோமரத்ன ராஜபக்ச மீண்டும் பேசத்தொடங்குகிறார். செம்மணி விடயத்தில் தமிழர்கள் பேசவேண்டிய விடயத்தை செம்மணியின் பிரதான குற்றவாளி சிறைக்குள் இருந்தபடியே உலகை நோக்கிப் பேசுகின்றார். இலங்கையின் நீதித்துறையிலும், மனிதப் புதைகுழி விடயத்திலும் நம்பிக்கையீனமுற்றிருக்கும் அவர், சர்வதேச விசாரணை வேண்டும் என்கிறார். அப்படி சர்வதேச விசாரணை நிகழ்த்தப்பட்டால் தான் சாட்சியமளிப்பேன் என்கிறார். கடந்த 29 வருடங்களாக வெளித்தொடர்புகள் எதுவுமற்று சிங்கள மக்களாலேயே மறக்கப்பட்டிருந்த ஒருவர் திடீரென வெளியில் வந்து தமிழர் பக்கமாக நின்று சர்வதேச நீதி கோருகின்றார். இது ஆச்சரியப்படத்தக்க மாற்றமெனினும், இதில் அவர்சார்ந்த நலன்களும் உண்டு. இதை வைத்தாவது சிறைக்கு வெளியில் வந்துவிடலாம் என அவர் கருதக்கூடும். தன்னால் பாதிக்கப்பட்ட தரப்பின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொண்டு, பொதுமன்னிப்பை பெற்றுக்கொண்டு, வெளியில் வரலாம் என யாராவது திட்டம்தீட்டிக்கொடுத்திருக்கக்கூடும்.

அவரின் உயிருக்கே ஆபத்தானதாக மாறியிருக்கும் அவரின் இந்த மாற்றங்களின் பின்னால் தற்போது ஆட்சியிலிருக்கின்ற அரசுக்கு எதிரான சக்திகளும் இருக்கக்கூடும். செம்மணி மனிதப் புதைகுழி தேசிய மக்கள் சக்திக்கு மிகுந்த சவாலானது. ஒரு கட்டத்திற்கு மேல் விசாரணைகளைக் கொண்டு நடத்த முடியாது. அப்படியே விசாரணைகள் என்று புறப்பட்டால் அது இராணுவத்தைக் காட்டிக்கொடுப்பதில்தான் அது போய் முடியும். மறுபுறத்தில் நீதியின் பக்கமே தம் ஆட்சி என மேடைக்குமேடை தேசிய மக்கள் சக்தி முன்வைத்த கோசங்கள் இன்னமும் ஓய்ந்தபாடல்லை. எனவே வைத்தகாலை எந்தப் பக்கமும் நகர்த்த முடியாத இக்கட்டு நிலையில் நிற்கிறது அரசு. இந்நிலையில் சிறைக்குள் இருக்கின்ற சோமரத்ன ராஜபக்ச கோரும் சர்வதேச விசாரணை அரசுக்கு அடுத்த தலைவலி. எந்தவிதமான சர்வதேச விசாரணைகளையும் ஏற்கமாட்டோம் என்பதில் விடாப்பிடியாக இருக்கிற இந்த அரசுக்கு, சிறைக்குள்ளிருந்தே சவால் விடுத்துக்கொண்டிருக்கிறார் சோமரத்ன ராஜபக்ச. இதுவரை காலமும் சர்வதேச விசாரணையை தமிழ் மக்களே கோரிக்கொண்டிருந்தனர். இம்முறை முதன்முறையாக அரசின் முன்னாள் படையாள் சர்வதேச விசாரணையைக் கோருகின்றார். இதனை நிராகரிக்கவும் முடியாது. அவரை சிறைக்குள்ளேயே வைத்து போட்டுத் தள்ளவும் முடியாது. அதேவேளை சோமரத்ன ராஜபக்ச கோருவதைப்போல சர்வதேச விசாரணைக்கு உடன்படவும் முடியாது. அப்படி உடன்பட்டால் அது இராணுவத்தைக் காட்டிக்கொடுத்ததாகப் போய்விடும். இது விடயத்தில் இலங்கையின் நீதிமன்றங்களுக்குள்ளால் நீதியான விசாரணையை நடத்துவோம் என்கிற வாக்குறுதியை தன் முன்னாள் படையாளுக்குக்கூட வழங்கமுடியாத நிலையில் நிற்கிறது அரசு,

தமிழர்களைப் பொறுத்தவரையில் சோமரத்ன ராஜபக்ச விவகாரம் மிக முக்கியமானது. 1997ஆம் ஆண்டில் எப்படி செம்மணி மனிதப் புதைகுழியை காட்டிக்கொடுத்து, தமிழின அழிப்பின் கோரத்தை உலகிற்கு அம்பலப்படுத்தினாரோ, அதைவிட முக்கியமானதொரு வழியை அவர் இப்போது திறந்திருக்கிறார். தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவழிப்பிற்கு உள்ளக விசாரணையே தீர்வு எனவும், இங்கு இனவழிப்பு இடம்பெறவில்லை எனவும் வாதிடும் உள்ளூர் - சர்வதேச தரப்புகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படக்கூடிய வலுவான கருவி இந்த சோமரத்ன ராஜபக்சதான். தமிழின அழிப்பில் ஈடுபட்டு, இலங்கை அரச நீதிமன்றத்தால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரே, இந்நாட்டின் நீதித்துறை மீதான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். சர்வதேச விசாரணைக்குத் தயார் என்கிறார். இத்தகையதொரு நீதிப்பொறிமுறையை தமிழர்கள் கோரும் நீதி விடயத்திற்குப் பிரயோகிப்பது எங்கனம் பொருத்தமானதாகும் என்கிற கேள்வியைத் தமிழ் தரப்புகள் வலுவாக முன்வைக்க முடியும்.

ஈழத்தமிழர்களை மையப்படுத்திய சர்வதேச அரசியல் விடயம் கைவிட்டுப்போகும் இத்தருணத்தில் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச ஒரு துருப்புச்சீட்டைப்போல கிடைத்திருக்கிறார். தமிழர்களுக்குத்தான் இது புரியவில்லை.

# நீதிக்கான பயணம் மிக நீண்டது!

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நியூசவுத் மாநிலத்தின் முன்னாள் ஒருங்கிணைப்பாளரும் அகதிகள் செயற்பாட்டாளருமான சாரதா இராமநாதன், ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுக்கு, தமிழின அழிப்புக்கான நீதி கோரி செல்லவுள்ளார். இந்த அவசரமான பயண நெருக்கடிக்கு மத்தியிலும் அவர் எதிரொலிக்காக வழங்கிய செவ்வி இது.**

**நேர்கண்டவர்: ஜே.ஜே**



**கேள்வி: நீங்கள் எந்த அமைப்பின் ஊடாக இனவழிப்புக்கான நீதியை கோரி நிற்கிறீர்கள்..?**

*பதில்:* ஐக்கிய நாடுகள் சபையின் 60 ஆவது மனித உரிமைகள் பேரவையின் தொடர் கூட்டத்துக்கு Association Culture Femmes என்ற சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் சார்பில் நான் பங்கேற்றாலும், ஆஸ்திரேலியாவில் பல தமிழ் அமைப்புகளுடன் குறிப்பாக ஆஸ்திரேலியா தமிழர் பேரவை (Australian Tamil Congress) உடன் இணைந்து மனித உரிமைச் செயற்பாட்டுத் தொண்டராகப் பணியாற்றி வருகிறேன். அத்தோடு இங்கு நிரந்தரப் புகலிடம் கோரி நிற்கும் எமது தமிழ் உறவுகளுக்கு அவர்களின் நிரந்தரப்பதிவிடம் வாழ்வுரிமை பற்றிய நலன்களில் மேலும் பலருடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றேன்.

**கேள்வி: இனவழிப்புத் தொடர்பாக உங்கள் அமைப்பின் செயற்பாடுகள் என்ன?**

*பதில்:* ஆஸ்திரேலியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இங்குள்ள வெளி விவகார அமைச்சு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், ஊடகங்கள் போன்ற பல்வேறுபட்டவர்களுக்கு தாயகத்தில் எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பு குறித்தான விபரங்களை நேரடியாகச் சந்தித்தும், அறிக்கைகள் விபரங்கள் மூலம் பகிர்ந்தும் பணியாற்றி வருகிறோம். சர்வதேச ரீதியில், மற்றைய புலம்பெயர்ந்த நாடுகளின் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் எமது தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்கும் செயல் திட்டங்களுக்கு வலுச்சேர்த்து வருகிறோம். தாயகத்திலும், எமது மக்களின் மீதான மனித உரிமை மீறல்கள், காணாமல் போனோர் பற்றிய விபரங்கள் என்பனவற்றை சர்வதேச சட்டவியல் கோட்பாடுகளுக்கு அமையும் வண்ணம் சேகரிக்கும் முயற்சிகளுக்கு பொருளாதார நிதி உதவி செய்து வருகிறோம்.

**கேள்வி: இந்தச் செயற்பாடுகளுக்கு தமிழர்கள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றனர்..?**

*பதில்:* ஆஸ்திரேலியாத் தமிழ் மக்களின் பங்களிப்பு இந்தத்திட்டங்களுக்கு நிதி, மற்றும் அறிவு சார்ந்து இருப்பது நமக்கு இதமும் ஊக்கமும் தருகிறது. அதே சமயம் எமது தேவைகள் மேலும் அதிகம் இருப்பதால், ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களின் கூடுதல் ஈடுபாட்டையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம். இங்கு வாழும் எமது மக்கள் ஒவ்வொருவரும், தம்மை "தாயகத்தின் பிரதிநிதிகளாக" நினைத்து ஒரு நாளில் குறிப்பிட்ட சில நிமிடங்களையாவது எமது தாயகத்தின் நலன் குறித்து பணி செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டி நிற்கிறோம்.

**கேள்வி: இனவழிப்புதான் நடந்தது என்பதை உறுதிப்படுத்த உங்கள் அமைப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களாக எதனைக் கருதுகிறீர்கள்..?**

*பதில்:* ஆஸ்திரேலியா தமிழர் பேரவை (ATC) மற்றும் பல அமைப்புகள் ஏற்கனவே இன அழிப்புச் சம்பந்தப்பட்ட பல விபரங்களையும் மற்றும் சாட்சியங்களையும், ஆஸ்திரேலியாவில் இயங்கும் Public Interest Advocacy Centre (PIAC) மற்றும் International Commission of Jurists (ICJ) போன்ற அமைப்புகளுக்கு எமது மக்களின் சாட்சியங்களை திரட்டி முன்னர் கொடுத்துள்ளோம். இதைவிட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சாட்சிகள் சேகரிப்பு அலுவலகத்துக்கும் (Office of the Sri Lanka Accountability Project) இன அழிப்பு சம்பந்தப்பட்ட நேரடிச் சாட்சியங்கள் விபரங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், மேலும் சேகரிப்பு முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. இவற்றுக்கான நேரடி நிதி மற்றும் சர்வதேச தொடர்புகளையும், தாயகத்தில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு நாம் வழங்கி அவர்களோடு இணைந்து பணியாற்றுகிறோம்.

**கேள்வி: ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தமிழர்கள் அடைந்த அடைவுமட்டம் என்ன..?**

*பதில்:* கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தாலும் அவை யாவும் இலங்கை அரசினால் உதாசீனம் செய்யப்பட்டு எந்த வகையான முன்னேற்றமும் தாயகத்தில் எமது மக்களுக்கு ஏற்படவில்லை என்பதே உண்மை. இருப்பினும், தாயகத்துக்கு வெளியே எமது மக்களுக்கு ஆன நீதியை நிலைநாட்டும் பல திட்டங்களில் முன்னேற்றங்கள் உண்டு. குறிப்பாக நான் முன்பு Office of the Sri Lanka Accountability Project அமைப்பானது, இதுவரை ஆயிரக்கணக்கான சாட்சியங்களை பெற்றுக் கொண்டுள்ளது என்பதுடன், அவ்வகையான சாட்சியங்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வழக்குகள் விசாரணைகளில் பயன்படுத்தப்படும் முக்கியமான சாட்சியங்கள் என்பதும் உண்மை. இவற்றை சர்வதேச ரீதியில் ஐ.நா.வினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு ஊடாகச் சேகரிக்க பட்டுள்ளமை தீர்மானத்தின் ஒரு முக்கியமான நன்மையாகக் கருத முடியும். இந்த முயற்சியை மேலும் வலுப்படுத்தி, இன்னும் பல சாட்சியங்களை இப்போது எந்த நீதிமன்றத்திலும் ஸ்ரீலங்காவை முற்படுத்தும் போது, இதைப் பயன்படுத்தும். இந்த கட்டமைப்பு மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் மூலம் உருவாக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

**கேள்வி: முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து 16 வருடங்கள் ஆன போதும் இனவழிப்பை நிரூபிப்பதற்கான வழி முறை எங்களிடம் இல்லை அல்லது தெரியவில்லை என்று பொருள் கொள்ளலாமா..?**

*பதில்:* அவ்வாறு கொள்ள முடியாது என்றே நான் கூறுவேன். இதற்கான அடிப்படைக் காரணம் சர்வதேச நீதிக்கான பயணம் என்பது ஒரு நீண்ட பயணம் என்பதுடன், உலகின் நாடுகளின் மற்றைய மக்களும் இத்தகைய ஒரு நீண்ட பயணத்தையே நேர்கொள்ள வேண்டி இருந்தது என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. குற்றங்கள் நடந்து பல நீண்ட ஆண்டுகளுக்குப் பின்பு தான் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட உலக வரலாறு நம் கண் முன்னே இருக்கிறது. இதனால் நாம் சோர்வு அடையாமல் தொடர்ந்தும் இந்த முயற்சியையும் பயணத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்து.

**கேள்வி: இனவழிப்புக்கான நீதி வேண்டிய கோரிக்கை இன்னும் பல ஆண்டுகள் இழுத்து செல்லப்பட்டால் அது நீர்த்துப்போகாதா..?**

*பதில்:* இல்லையென்றே மீண்டும் சொல்ல வேண்டி இருக்கிறது. ஏனென்றால் நீதிக்கான பயணம் நீண்டது. இதில் எமது தொடர்ச்சியான கவனமும் செயற்பாடும் இருக்கும் பட்சத்தில் இதனை நாம் இறுதிவரை கொண்டு சென்று நீதியை நமது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். இதனையே வேறு நாட்டின் அனுபவங்கள் எமக்குச் சொல்லி நிற்கின்றன.

**கேள்வி: ஒவ்வொரு முறையும் ஐ.நா.வில் இலங்கைக்கு எதிராக – தாக்கம் செலுத்தக்கூடியளவில் எந்தத் தீர்மானங்களும் வந்ததாக தெரியவில்லை. அப்படி ஏதாவது சின்ன விடயங்கள் வந்தால் கூட இலங்கை அடுத்த நிமிடமே மறுதலிக்கும். இலங்கையின் இனவழிப்பை அம்பலப்படுத்துவதற்காக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் என்ன வேலைத் திட்டங்களை செய்துள்ளன..?**

*பதில்:* இதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவெனில் பல்வேறு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் வெவ்வேறு வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. சில வேலைத்திட்டங்களில் அவை ஒற்றுமையின்மையையும் ஒருமித்த கருத்தையும் காட்டவில்லை என்று சிலர் கூறினாலும் உண்மையில் அதுவும் ஒரு வகையான திட்டமிடல் Strategic approach) என்றே நாம் கருத வேண்டும். அந்த அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு வெளியே தமிழ் மக்களுக்கான நீதியைப் பெறும் பொறிமுறைகளுக்காக பல அமைப்புகளுடன் சேர்ந்து நம்மால் ஆன உதவிகளை கொடுத்து வருகிறோம். ஸ்ரீலங்காவுக்கு வெளியே ஸ்ரீலங்காவின் ஒப்புதல் இல்லாத பல இன அழிப்பு பரிகாரப் பொறிமுறைகள் இருக்கின்றன. இவற்றை புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் சரியான வகையில் கையாண்டு ஸ்ரீலங்காவுக்கு அழுத்தத்தைக் கொண்டு வர முடியும்.

**கேள்வி: செம்மணி முதல் பல தடயங்கள் இனவழிப்பை வலியுறுத்தி நிற்கின்றன. இலங்கையில் தமிழினம் மீது இனவழிப்புத் தான் நடைபெற்றது என்பதை நிரூபிக்க ஏன் புலம்பெயர் தமிழ் சமூகம் திணறுகிறது..?**

*பதில்:* சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு 1.5 மில்லியன் மக்களை இனப்படுகொலையில் பலி கொடுத்த ஆர்மேனிய மக்கள் இன்றும் அதனை படுகொலையாக அங்கீகரிப்பதற்கு போராடி வருகிறார்கள். எமது நாடாகிய ஆஸ்திரேலியா கூட இந்த ஆர்மேனியப் படுகொலையை பல்வேறு காரணங்களுக்காக இதுவரை அங்கீகரிக்கவில்லை. இன அழிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட 'மிகக்குறுகிய வரைவிலக்கணம்' உடையது. அதனை நிறுவுவதற்கான அடிப்படை மூலங்கள் முற்றாகச் சேகரிக்கப்பட்டு நிரூபிக்கப்பட வேண்டும். அதனை நாம் சிறிது சிறிதாகச் செய்து வருகிறோம் என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன. குறிப்பாக கனடிய, பிரிட்டிஷ் அரசுகளின் நடவடிக்கைகள், சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய உரைகள், பல்வேறு மாநாட்டுத் தீர்மானங்கள் என்பன மூலம் ஈழத் தமிழருக்கு எதிரான இனப்படுகொலை நிரூபிக்கப்பட்டு வருகிறது. நீதிக்காக தொடர்ச்சியாகவும் பரவலாகவும் இதில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாக, நாம் குரல் எழுப்பி வருவது முக்கியமானது. எமது வலியை முதலில் நாமே அடுத்தவர் அறியும் வகையில் நமக்கு நடந்தது இன அழிப்பு என்று சொல்ல வேண்டும். அவ்வாறு நாம் கூறி வந்தால் மட்டுமே இன அழிப்பு அங்கீகாரம் பலம் பெறும் என்பதுடன் பலன் தரும் என்பதும் உண்மை.

**கேள்வி: ஒருவேளை, ஏதேனும் அற்புதங்கள் நடந்து, சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்தப்பட்டால் அதனை யாரிடம் ஒப்படைப்பது என்ற கேள்வி உள்ளது..? ICC, ICJ, IIM என்று மாறி மாறி சொல்லுகிறார்கள். இதில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

*பதில்:* இவை வெவ்வேறு பரிகார முறைகள், பாதைகள் என்பதுடன் இவற்றில் எல்லாமே எமக்குப் பயனுள்ளவை என்பதும் முக்கியமானது. ICC போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கும் ஒரு முறை. ICJ ஒரு நாட்டை தண்டிக்கின்ற இன்னும் ஒரு பொறிமுறை. இதைவிட ஒவ்வொரு நாடுகளும் வேறொரு நாட்டில் நடைபெற்ற குற்றங்களை விசாரிக்கும்/ தண்டிக்கும் பொறிமுறைகளையும் கொண்டிருக்கின்றன (Universal Jurisdiction). இவற்றை எல்லாம் காலச் சூழ்நிலைக்கும், சர்வதேச ஒழுங்கு முறைக்கும், மற்றும் பல்வேறு சர்வதேச சக்திகளின் நலன்களை எமக்கு சாதகமாக பயன்படுத்தியும் எமது மக்களுக்கான நீதியை நாம் பெற்றுக்கொள்ள எல்லா வழிகளையும் முயற்சிக்க வேண்டும் என்பதே எனது கருத்து.



**கேள்வி: திருவிழாக் காலங்களில் கோயில்களில் மக்கள் குவிவதைப்போல ஜெனிவாத் திருவிழா காலங்களில் மட்டுமே பலர் கோப்புகளை துசு தட்டுகின்றனர். இதைப் பற்றி உங்களின் கருத்தென்ன..?**

*பதில்:* எம்மைப் பொறுத்தவரை ஜெனிவா என்பது ஒரு களம் மட்டுமே. எமது மக்களுக்கான நீதி ஜெனிவாவில் மட்டும் முடக்கப்படவில்லை. அதனை நான் குறிப்பிட்டது போல பல்வேறு தளங்களில் களங்களில் நாம் பெற முயற்சிக்க வேண்டும். அதற்கான முயற்சி நீங்கள் குறிப்பிட்டது போல் ஒரு குறிப்பிட்ட காலங்களில் மட்டும் இல்லாமல் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பதே எமது எண்ணம். இதன் முயற்சிகள் பல தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தாலும் "ஜெனிவா காலம்" என்பது பலரின் கவனத்தை பெறுகிறது. ஆனால் பல முயற்சிகள் தொடர்ச்சியாக திரை மறைவில் நடக்கின்றன என்பதும் உண்மையே. இதன் வெற்றியைப் பொறுத்திருந்து தான் நாம் பார்க்க வேண்டும்.

**கேள்வி: உலகத்தில் நடந்த வேறெந்த இனவழிப்புக்கான நீதியை ஐ.நா. பெற்றுக்கொடுத்ததாக நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.?**

*பதில்:* ஆம், நீண்ட கடினமான முயற்சிகளின் பின்பு சேபியா, ருவாண் டா, சீரொலியோன், லைபிரியா, கம்போடியா பெற்று இன்னும் பல நாடுகளில் இடம்பெற்ற இன அழிப்பு மனித உரிமை மீறல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பொறிமுறைகளின் கீழ் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டனை பெற்றுள்ளார்கள்.

**கேள்வி: அப்படியானல், அந்த நாடுகளில் நிகழ்ந்தவை இனப்படுகொலைகள் தான் என்பதை எப்படி ,எந்தப் பொறிமுறையில் நிரூபித்தார்கள் என்று தெளிவுபடுத்த முடியுமா..?**

*பதில்:* நிச்சயமாக ஆனால் இவை ஒவ்வொன்றும் நீண்ட வித்தியாசமான பாதைகளுக்கு ஊடாக கிடைக்கப்பெற்ற நீதி. இவற்றின் சுருக்கத்தை ஆங்கிலத்தில் கீழே தந்துள்ளேன்.

### 1. International Criminal Tribunals

**ICTY (International Criminal Tribunal for the Former Yugoslavia)**

- Established: 1993 by UN Security Council Resolution 827.
- Results: Indicted 161 individuals, including Slobodan Milošević (Serbian President), Radovan Karadžić, and Ratko Mladić.
- Legacy: Pioneered jurisprudence on genocide (Srebrenica), command responsibility, and sexual violence as a war crime.

**ICTR (International Criminal Tribunal for Rwanda)**

- Established: 1994 by UN Security Council Resolution 955.
- Results: Prosecuted high-level perpetrators of the 1994 genocide, including Prime Minister Jean Kambanda (the first head of government convicted of genocide).
- Legacy: Recognised rape as a form of genocide; helped develop international criminal law precedents.

### 2. Hybrid / "Mixed" Tribunals 2. Hybrid / "Mixed" Tribunals

*These were set up with UN involvement but incorporated domestic systems.*

**Special Court for Sierra Leone (SCSL)**

- Backed by UN and Sierra Leone government (2002).
- Convicted Charles Taylor, former President of Liberia — the first head of state convicted by an international tribunal since Nuremberg.

**Extraordinary Chambers in the Courts of Cambodia (ECCC)**

- Joint UN–Cambodian tribunal for Khmer Rouge crimes.
- Secured convictions of senior Khmer Rouge leaders (e.g., Nuon Chea, Khieu Samphan) for genocide and crimes against humanity.

**Special Tribunal for Lebanon (STL)**

- UN–Lebanon agreement (2007) investigating the assassination of PM Rafik Hariri.
- Mixed success — one conviction in absentia.

### 3. Permanent International Criminal Court (ICC)

- Established: 2002, Rome Statute (independent, but often referred cases by the UN Security Council).
- Results: Convicted Congolese warlords (Thomas Lubanga, Bosco Ntaganda).
- Convicted Ahmad al-Faqi al-Mahdi for destruction of Timbuktu cultural heritage.
- Ongoing trials for crimes in Darfur (Omar al-Bashir indictment) and Ukraine (arrest warrant for Vladimir Putin in 2023 for unlawful deportation of children).
- Limitations: Not all states are members (e.g., US, China, Russia, Sri Lanka), and enforcement depends on state cooperation.

### 4. Ad Hoc UN Investigative Mechanisms

- n some situations, the UN has created special investigative bodies:
- IIIM for Syria (2016) and IIMM for Myanmar (2018) — collect and preserve evidence for future prosecutions.
- UN Investigative Team for Da'esh/ISIL (UNITAD) — documenting ISIS atrocities in Iraq.
- While these mechanisms don't prosecute directly, their evidence has been used in domestic courts under universal jurisdiction (e.g., German courts prosecuting Syrian officials).

### 5. Universal Jurisdiction Cases Aided by UN Evidence

National courts (Germany, France, Sweden, etc.) have prosecuted war crimes using UN reports and evidence.

**Example:** In 2021, a German court convicted a former Syrian intelligence officer for crimes against humanity — heavily supported by UN and NGO documentation.



**கேள்வி: தற்போது இலங்கையில் தேசிய மக்கள் சக்தியின் அரசு புதிதாக ஆட்சி அமைத்திருக்கிறது. யுத்தம் நடந்த காலத்தில் இலங்கை அரசுடன் இருந்தாலும் பொறுப்புக் கூறலுக்கான அதாவது இனவழிப்பின் போது ஆட்சியில் இல்லாத அரசாக உள்ளது. அதுமட்டுமின்றி சர்வதேசத்தின் ஆதரவும் உள்ளது. முன்னாள் ஜனாதிபதியான ரணிலை கைது செய்வதன் ஊடாக சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற எண்ணக் கருவையும் உருவாக்கியுள்ளது. இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணை என்பது சாத்தியப்படுமா?**

*பதில்:* இந்தக் கேள்வி பலரின் மனதில் இருப்பது உண்மையே ! ஆனாலும் அநுரா அரசினால் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியுமா என்ற கேள்விக்கு பதில் இலகுவானது. இந்த அரசின் பல சக்திகள் இனவாதப் போக்கைக் கடைப்பிடித்து இருப்பதுடன் இதுவரை ஆக்கபூர்வமான, தமிழர் மீதான இன அழிப்பு தொடர்பான எந்த மாற்றங்களும் விசாரணைகளும் தாயகத்தில் இடம்பெறவில்லை. நீண்ட காலமாக வதைபட்டு வாழும் அரசியல் கைதிகளின் விடுதலை இன்னும் இடம்பெறவில்லை. கைது செய்யப்பட்ட ரணில் சிறையில் சில நாட்கள் கூட இருக்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டாலும் கூட புதிய சட்டம் எவ்வாறு தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் என்பது கேள்வியாகவே உள்ளது. சர்வதேச ஆதரவு என்பது அநுரா அரசுக்கு தற்பொழுது இருந்தாலும் அது நிரந்தரமானதாக இருக்குமா என்பது அநுரா அரசின் போக்கை பொறுத்தே இருக்கிறது. சிங்களவர்களுக்கு ஒரு நீதியாகவும் தமிழருக்கு ஒரு நீதியாகவுமே ஸ்ரீலங்கா அரசுகள் செயற்பட்டு வந்தன வருகின்றன. அரசுகள் மாறினாலும் ஸ்ரீலங்கா ஒரு நாடாக தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரப்போவதில்லை என்பதே கடந்த வரலாறுகள் காட்டிய உண்மை. இந்த உண்மையை உலகிற்கு விளக்கி நாம் எமது மக்களுக்கான பரிகார நீதியை பெற்றுக் கொடுக்கும் முயற்சியில், அனுபவங்களை கற்று அறிந்து சர்வதேச சூழ்நிலைகளைக் கையாண்டு தொடர வேண்டும்.


SERENDIB
CARGO EXPRESS
- personal touch
professional service -
PAY FOR 1
GET 1 FREE!!!
Pay AUD$ 60 for 1 Box and get another Box totally free!!
Door Delivery Charges - AUD$50 (Excluding Sri Lankan Tax)
GET YOUR PACKAGE DELIVERED WHEN YOU WANT IT!
AUD $12 per Kg (below 10Kg)
AUD $9 per Kg (above 10Kg)
Door Delivery Charges - AUD $1.90 per Kg
TIME TO PAMPER YOUR LOVED ONES WITH AUSTRALIAN PRODUCTS
Tell Us What You Need - We'll Buy It & Ship It!
Delivery to their doorstep within 7 days!!
Cargo will be collected at the Address.
Unit 147, 170 Foster Road,
Mount Waverly, Melbourne, Australia
CONTACT
+61 402 703 080
+61 421 208 739
info@serendibworldwide.com
Shipments leaving on the 15th of every month

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.





If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# எதிர்ப்பக்கம்



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

## அண்ணாவின் ‘திராவிட நாடு’

திராவிட நாடு என்ற கோட்பாடு எப்படி அடிப்படையிலேயே பிழையில் இருந்திருக்கிறது என்பதை கட்டுரையாளர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன் மிகத்தெளிவாக கம்யூனிஸ்ட் தலைவர் பி.ராமமூர்த்தி எழுதிய “ஆரிய மாயையா? திராவிட மாயையா? - விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்” நூலைக்கொண்டு விளக்கியுள்ளார்.

திராவிடர் இயக்கத்தின் முக்கியமான தத்துவமான ஆரிய எதிர்ப்புப் பற்றி அண்ணாத்துரை எழுதிய நூல் ‘ஆரிய மாயை’ என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அந்த நூலில் திராவிட நாடு என்ன என்பதை விளக்கியுள்ளார். அதாவது நர்மதை நதிக்கு வடபுறத்திலிருக்கும் பகுதியை ஆரிய நாடு என்றும், தென்புறத்திலிருக்கும் பகுதியை ‘திராவிட நாடு’ என்றும் அவர் கூறுகிறார். நர்மதை ஆற்றுக்குத் தெற்கே வாழும் மக்கள், குஜராத்தி மொழியைப் பேசும் ப்ரோச், சூரத், டாமன் பகுதி மக்கள், மராத்தி மொழி பேசும் மகாராஷ்டிரா முழுவதும் உள்ள மக்கள் ஆகிய அனைவரும் அண்ணாத்துரை கூறிய கருத்துப்படி ‘திராவிடர்கள்’தானா? ‘ ‘ஆரிய மாயை’ நூலில் அண்ணாத்துரை கூறிய கலிங்கப் போரின் படி பார்த்தால் கலிங்கமும் (தற்போது ஒரிசா) திராவிட நாட்டைச் சேர்ந்ததே. அவர்கள் பேசும் ஒரியா மொழியும் திராவிட மொழிகளில் ஒன்றே.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தங்களை மாற்றிக்கொண்டு சென்னை ராஜதானி அளவிலுள்ள நிலப்பரப்பு மட்டும் திராவிட நாடு என்று மாற்றிக்கொண்டனர்.காரணம், அவர்கள் யாரையெல்லாம் திராவிட நாட்டவர், திராவிட இனத்தவர் என்று விளக்கம் கொடுத்தார்களோ, அந்த மக்கள் கொஞ்சம் கூட மதிக்கவில்லை. அதன்பிறகு மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு அந்தக் கொள்கை நீர்த்துபோய்விட்டது என்கிறார் ஆசிரியர்.

“இன்று ஆரியர்கள் கடவுள்களாக வணங்கும் இராமன் திராவிடர்களை வென்று தென்நாட்டிலும், இலங்கையிலும் ஆரியர்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தியவன்” என்றும் அண்ணாத்துரை கூறுகிறார். “வேற்று நாட்டவர்கள் படையெடுப்புகளினால் திராவிட நாடு பாதிக்கப்படவே இல்லை என்று கதையடித்துவிட்டு பிறகு புராணக்கதையை கூறி ராமன் தான் திராவிடத்தை அழித்தான் என்பது வேடிக்கையாக இருக்கிறது” என்று அண்ணாவின் ‘திராவிட நாடு’ கொள்கை குறித்து பி.ராமமூர்த்தி தனது நூலில் விமர்சித்துள்ளார்.

ஆனால் இதில் மாபெரும் விந்தை என்பது என்னவென்றால், அண்ணாத்துரை தொடக்கம் முதலே விமர்சித்த அதே கம்யூனிஸ்ட் கட்சிகள் பிறகு அவருடன் சேர்ந்து அவரை அரியணையில் ஏற்றின. இதைவிட சந்தர்ப்பவாதம் வேறு என்ன இருக்கமுடியும்?

## அணி சேரா அரசியல்

கட்சி சார்பான அரசியல் சார்பு நிலை என்பது கத்தி மேல் நடப்பது போன்றது. நீங்கள் எப்பொழுதும் சமரசம் செய்து கொள்ளத் தயாராகவே இருக்க வேண்டும். இடதுசாரிகளின் நிலைப்பாடு ஏறக்குறைய தர்மசங்கட நிலை தான். துப்புரவுப் பணியாளர்களை நடத்திய விதத்தை கண்டு அவர்களால் கொதிக்க முடியாது. ஏனென்றால் அரசியல் சார்பு நிலை. இடதுசாரித் தோழர்களுக்கும் இதே நிலை தான். அவர்கள் கட்சியை மீறி எந்தவித செயற்பாடும் எடுக்க முடியாது. எப்பொழுதும் திராவிடக்கட்சிகளுக்கு முட்டுக்கொடுத்து நடக்கவேண்டியது தான் உண்மை. உண்மையான அரசியல் நிலைப்பாடு என்பது என்னவாக இருக்க முடியும். எந்த அரசியல் கட்சியின் பக்கமும் சேராமல் உங்களால் இயன்ற அளவில் நல்லது நடக்கும்போது தட்டிக்கொடுப்பதும் (பா.ஜ.க நல்லது செய்தாலும்), தீமையைக் கண்டு கொதிப்பதும் (உங்கள் கூட்டணிக்கட்சியாக இருந்த போதிலும்). எழுத்தாளர் ஜெயமோகனும் இந்த அரசியலைத் தான் பேசுகிறார்.

ஜெயமோகன் மக்களிடம் அவர்களது கருத்தை மாற்றுவதற்கான நுண்ணலகு அரசியலைப் பேசுகின்றார். அந்த அரசியலுக்கு ஆட்சியைப் பிடிக்கும் நோக்கமில்லை என்பதால் சமரசம் என்ற பேச்சிற்கே இடமில்லை. தாங்கள் நம்பும் சித்தாந்தத்தை தொடர்ந்து மனம் விடாமல் செய்துகொண்டேயிருக்கிறார்கள். வெறுப்பும் ,கொந்தளிப்பும் அங்கே கிடையாது . துளியளவு பங்களிப்பாற்றினாலும் அந்த அளவுக்கு மன நிறைவு அமையும். கண்டிப்பாக எல்லோரும் படிக்க வேண்டிய கட்டுரை.

## உள்ளிருந்து எழுவதோ பேய்

சிறு பிராயத்தில்
காலம் நீளமாக இருந்தது
அப்பைய்யா நீளமாக இருந்தார்
சாமிகள் நீளமாக இருந்தார்கள்
நினைவுகள் நீளமாக இருந்தன
இன்பமும் துன்பமும் நீளமாக இருந்தது
நாழி கிணறு
உயரமாக
தெரிந்தது
முதிர்ந்த பிறகு
எல்லாம் குட்டையாகி விட்டன
இன்பமும் குட்டை
துன்பமும் குட்டை
உயரமும் குட்டை
கசந்தாலும் நீளம் தூய்மையாக இருந்தது
இப்போது
இனிப்புக் குட்டையில்
நிலா விழுகையில்
உள்ளிருந்து எழுவதோ
பேய்

- லக்ஷ்மி மணிவண்ணன்

கவிதை என்பது எனக்கு எப்போதும் சிக்கல் தரும் செயல் தான். அபிமன்யூ சக்கர வியூகத்தில் மாட்டிக்கொண்டது போலத்தான், எனக்கும் கவிதைகளுக்கும் இடையிலான விளையாட்டு. சில கவிதைகள் எளிதில் புரிந்துவிடும். சில என்னை சிக்கலில் மாட்டிவிட்டு தூக்கத்தை கலைத்துவிடும். இந்தக்கவிதையை அதிகாலையில் லக்ஷ்மி மணிவண்ணனின் தளத்தில் படித்த பிறகு உறக்கம் போயிற்று, 20 வரிகளில் ஒரு வாழ்க்கையை சொல்லுவது கவிதையில் எளிது இல்லையா.

இன்பமும் ,துன்பமும் எவ்வளவு நீண்டதாக இருந்தன. அந்தக் கால பண்டிகை கால நாட்கள் எவ்வளவு நீண்டவையாக இருந்தன.இப்பொழுது எல்லா நாட்களும் ஒன்று தான். எல்லாப் பண்டிகையும் ஒன்று தான். அவ்வாறென்றால் எவை நம்மை தீர்மானிக்கின்றன ?

இந்தக் கவிதையின் இறுதி வரியினைப் பாருங்கள். உள்ளிருந்து எழுவதோ பேய் - எப்பொழுதும் மனக்குகையில் பேயினைப் பிடித்துக்கொண்டு அலைகிறோம். சந்தோசம் தொலைத்துவிட்ட தலைமுறை தான் நாம்.

## நினைவுகளுடன் போரிட்டு வெல்ல முடியாது

கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து

இக்குறளின் பொருளாவது , “மனத்தின் கண் எழும் சினம் காத்து, அடங்கியிருக்கக் கூடியவனைக் கண்டு மகிழும் நற்பொழுதுக்காக அறம் உரிய சமயத்தை பார்த்துக் கொண்டிருக்கும்.” செவ்வி என்பதற்கு தக்க காலம் ஃநேரம் என்று பொருள். interview (நேர்காணல்) என்பதற்கு செவ்வி என்கிறார் அ.முத்துலிங்கம்.

சமூக ஊடகங்கள் வந்த பிறகு எங்கு திரும்பினும் உரையாடல்களும், நேர்காணல்களும் மலிந்து விட்ட இந்த வேளையில் மிக அரிதாகவே அற்புதமான உரையாடல்களைப் பார்க்க முடிகிறது. அதுவும் நம் மனதுக்கு பிடித்த கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் இருவர் பேசுவதைக் கேட்பதைவிட வேறு என்ன சொல்ல முடியும்?

நாங்கள் இளவயதில் கிரிக்கெட் விளையாடிய காலங்களில், சச்சினின் ரசிகனான எனக்கு ராகுல் டிராவிட்டை அவ்வளவாகப் பிடிக்காது .ஏனென்றால் அவர் வந்துவிட்டால் ரன்ரேட் குறைந்துவிடும். ஆனால் டெஸ்ட் போட்டியென்றால் எங்களது விருப்பம் எல்லாம் ட்ராவிட் போல விளையாடவேண்டும் என்பதுதான். எந்தப் பந்தினை அடிக்காமல் விடவேண்டும் என்பதை நன்றாக அறிந்தவர். பொறுமையின் சிகரம். கோபப்படுதல் ,ஆக்ரோஷம் எல்லாம் அவரிடம் கிடையாது. இப்போது அவரது பழைய விளையாட்டுகளை பார்க்கும்போது தெரிகிறது ,அவரது விளையாட்டு நுணுக்கங்கள். அவ்வளவு பொறுமையான அதிர்ந்து பேசாத நபரை கூட்டிவந்து 1 மணி நேரத்துக்கும் மேலே மனம்திறந்து பேச வைத்ததே ஒரு திறமை தான். அதற்கே நாம் அஸ்வினைப் பாராட்ட வேண்டும்.

மொத்தப் பேட்டியுமே சிறப்பு என்றாலும் குறிப்பாக மூன்று அல்லது நான்கு விஷயங்களைக் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். பொதுவாக அஸ்வின் தான் மற்றவரிடம் கேள்வி கேட்பார். இங்கே ட்ராவிட் அஸ்வினைக் கேட்டு நமக்கு நிறைய விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்புச் செய்திருக்கிறார். அஸ்வின் எவ்வாறு காலத்திற்கேற்றவாறு தம்மை தகவமைத்துக்கொண்டார் என்பதையும், அவரின் ஒவ்வொரு புதுவித பந்துவீச்சு முயற்சியும் உள்ளூர் விளையாட்டு வீரர்களுக்கு பந்துவீசி எவ்வாறு கற்றுக்கொண்டார் என்பதையும் நமக்குச் சொல்கிறார். (இது கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் பொருந்தும் ,தன்னைப் புதுப்பித்துக்கொள்ளாதவன் ரொம்ப நாளைக்கு தன்னை காப்பாற்றிக்கொள்ள முடியாது )

எப்பொழுது ஓய்வு பெறவேண்டும் என்பதற்கு ட்ராவிட் பாடம் சொல்கிறார்.இது எல்லோருக்கும் பொருந்தும். மற்றொரு நாளில் எளிதில் செய்துவிடக்கூடிய செயலை நீங்கள் கோட்டை விட்டீர்கள் என்றால் உங்கள் ஓய்வு காலம் நெருங்கிவிட்டது ( தான் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மைக் ஹஸ்ஸியின் எளிதான ’கேட்சினை’ நழுவவிட்டபோது ஓய்வு பெறவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது என்கிறார் )

உங்கள் நினைவுகளோடு போரிட்டு வெற்றி பெறமுடியாது என்கிறார். தனக்குப் பிடித்த விளையாட்டு வீரர்கள் கவாஸ்கர், விஸ்வநாத் மற்றும் கபில்தேவ் என்று சொல்லிவிட்டு,இவர்களை பார்த்து வளர்ந்தவன் .இவர்கள் என்றுமே என்னுடைய ஹீரோக்கள் என்று சொல்லியிருப்பது அபாரம்.

இப்பொழுது ஏகப்பட்ட தகவல்கள் உள்ளன. எங்கு பார்த்தாலும் தகவல் நுணுக்கங்கள். இவ்வளவு விபரங்களை வைத்துக்கொண்டு நீங்கள் என்ன முடிவெடுப்பீர்கள் என்பது சவால்தான். ஆனால் தன்னிச்சையாக வாழ்க்கை உங்களை இட்டுச்சென்று எடுக்கச்செய்யும் முடிவுகள் தேவையான சூழ்நிலையை இந்த தகவல் உலகம் இல்லாமலாக்குகிறது என்கிறார். யோசிக்கவேண்டிய விஷயம். Data is not a problem anymore. what do you do with the data is the key here. But if you take all the decisions with the data you will lose the situations where random points leads you to some unexpected paths. So True !

அவரது பேட்டிங் போலவே ,அஸ்வின் வீசிய விவகாரமான கேள்விகளை ஒதுக்கிவிட்டு மிக லாவகமாக ஆனால் மிகத்தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார். அதிலும் அவருக்கு நினைவில் நிறைக்கும் போட்டி எது என்ற கேள்விக்குண்டான பதில் அருமை (‘வெற்றியை விட தோல்வி தான் மிகக் கசப்பு. 2003 உலகக்கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் ‘ டாஸ் ’ஜெயித்துவிட்டு பேட்டிங் எடுக்கவில்லை. ஏனென்றால் மேகமூட்டமாக இருந்தது. ஆனால் விளைவு வேறுவிதமாக இருந்தது ’என்கிறார்).

பொறுமை ,அடக்கம் ,ஒவ்வொரு முறையும் அஸ்வினைப் பாராட்டிக்கொண்டே இருக்கிறார். தன்னிலையில் இருந்தும் சிறிதும் வழுவாத நமது நம்பிக்கைச் சுவர் டிராவிட் .அவசியம் பாருங்கள் . தவறவிடக்கூடாத செவ்வி.

My respect to Dravid grows more after seeing this interview. unmissable interview.

## பெரிதினும் பெரிது கேள்

வ.ரா எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாறு எனும் நூலைப் படித்தேன். வரலாறு என்று சொல்வதைவிட தான் பழகிய, அருகில் இருந்து பார்த்த மகாகவி எனும் மாமனிதனின் சித்திரத்தை இந்த நூலில் தந்திருக்கிறார்.

அவர் கண்ட பாரதி “சித்தன் போக்கு சிவன் போக்கு” என்று திரிபவர். யாருக்காகவும் தன்னை மாற்றிக் கொள்ளாதவர். எப்பொழுதும் தன்னை புதுப்பித்துக்கொள்ளத் தயாராகவே இருப்பவர். பெரிதினும் பெரிது கேள் - நிலையான வருமானம் கிடைத்த போதிலும் ஒன்றிலிருந்து ஒன்றிற்கு தாவுகிறார். அவருக்கு பிடித்த வேலையை மட்டுமே செய்பவராய் இருக்கிறார். அவர் தந்தையின் ஆசைப்படி படித்து பணம் சம்பாதிப்பதில் எண்ணம் இல்லை. அவரிடம் எல்லோரையும் வசீகரிக்கும் படி பேசும் வல்லமை இருந்திருக்கிறது. நிறையப் பேர் அவருக்கு உதவி செய்திருக்கிறார்கள். யாரிடமும் யாசகம் செய்து நிற்கவில்லை. சுதேசமித்திரன் ஆசிரியர் அன்பு செலுத்தி ஏமாற்றுகிறார் என்ற போதிலும் , தனக்கு பிடித்த காரியத்தை மட்டும் செய்கிறார். மனநலம் பாதிக்கப்பட்டவரை குணப்படுத்துகிறார், கிட்டத்தட்ட யோகி வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார். பாரதி புதுவையிலிருந்து வெளியேறாமல் இருந்திருந்தால் இன்னும் பலகாலம் வாழ்ந்திருப்பார் என்றே சொல்லவைக்கிறது அவரது புதுவை வாழ்க்கை.

புதுவையில் வாழ்ந்த போது பிரிட்டிஷ் காவலதிகாரிகள் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்த போதிலும் , அவற்றை அஞ்சாமல் எதிர்கொள்கின்றனர் பாரதி, அரவிந்தர் மற்றும் ஏனைய சுதேசிகள்.

மிதவாத காங்கிரஸ் கட்சியினரைவிட , தீவிரவாத காங்கிரஸ் மேல் அவருக்கு ஈடுபாடு அதிகம். திலகரின் மேல் அளவிட முடியாத பக்தி. திலகரைப் பழித்தவரை வசை பாடுகிறார். திலகரை நேரில் சந்திக்கும் சம்பவத்தை படிக்கும்போது கண்ணில் நீர் வருகிறது. காந்தியைச் சந்திக்குமிடம் நாம் ஏற்கனவே பாரதி திரைப்படத்தில் பார்த்திருக்கிறோம் .அந்நியத் துணிகளை முதலில் எரித்தவர் காந்தி இல்லை , விபின் சந்திர பாலர் தான் என்கிறார். இது நடந்தது சென்னையில்.

பாரதியைப் போற்றும்போது அவரின் தீய பழக்கங்களையும் தவறாமல் குறிப்பிடுகிறார். அபின் ,கஞ்சா மற்றும் ஜாதிக்காய் போன்ற போதை வஸ்துக்களின் பழக்கம். மற்றும் நாவினை கட்டுப்படுத்தாமல் கொடுஞ்சொற்களை ஏவுதல், கோபப்பட்டு தன்னை நம்பியவர்களை விட்டு ஓடி விடுதல் பிறகு அன்பிற்கு மட்டுமே கனிந்து விடுகிறார்.

பாரதி அவரே எழுதிய தன் வரலாறு சரித்திரமான “சின்னசங்கரன் கதை “பல்வேறு நையாண்டிகள் மற்றும் கேலிகளுடன் படைத்திருக்கிறார். ஆனால் 23 அத்தியாயங்கள் தொலைந்து போய்விட்டது (யாரோ திருடிவிட்டனர்). அதைத் திருடியதாக பாரதியுடன் தங்கியிருந்த பையனை எல்லோரும் குறை கூறியபோதும், அந்த சிறுவனை பாரதி நடத்திய விதம் மேதைமை. பிறகு அந்தத் தொடரை ஞான பானு இதழில் 7 அத்தியாயங்கள் எழுதியிருக்கிறார். ஆனால் முன்பு எழுதியது போல் வரவில்லை. தமிழுக்கு ஏற்பட்ட இழப்பு ,வேறு என்னசொல்ல.

பாரதி -அரவிந்தர் இருவருக்கும் இடையே நடந்த விவாதங்களை அருகில் இருந்து கேட்டிருக்கிறார். ஆனால் அவர் எந்தக் குறிப்பும் எடுக்கவில்லை என்று வருந்துகிறார். நமக்கு எவ்வளவோ மிகச்சிறந்த கட்டுரைகள் கிடைத்திருக்கும். என்ன செய்ய?

“அவர் தொடாதது ஒன்றும் இல்லை. தொட்டதை அழகுபடுத்தாமல் விட்டதில்லை “ - என்று டாக்டர் ஜான்சன், கோல்ட்ஸ்மித் பற்றி சொல்லியிருக்கிறார் . இது பாரதிக்கும் பொருந்தும்

tamilvu இணையத்தளத்தில் படிக்க கிடைக்கிறது. கட்டாயம் படியுங்கள்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI






## ஷாங்காய் மாநாடும் - சீன இராணுவ அணிவகுப்பும்!

# சீன-இந்திய-ரஷ்ய முத்தரப்பும் அமெரிக்க சீற்றமும்

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பானிய சாம்ராஜ்ஜியம் சரணடைந்த வெற்றியை கொண்டாடும் வகையில், உலகமே கண்வைத்துப் பார்க்கும் அளவுக்கு சீனாவில் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பு நடந்தது.

மிகப்பெரிய ராணுவ அணிவகுப்பில் இருபத்தாறு உலக நாடுகளின் தலைவர்கள் கண்டுகளித்தனர்.

அமெரிக்காவிற்கு எதிராக சீனா சதி செய்கிறது என்றும், நளினமாக புடின், கிம் ஜாங் ஆகியோருக்கு வாழ்த்துகள் எனவும் ஆதங்கத்துடன் டிரம்ப் தெரிவித்துள்ளமை, அமெரிக்காவிற்கு எதிரான சக்திகள் உருவெடுப்பதை அடியோடு நிறுத்த முயல்வது வெளிப்படையாகத் தெரிகிறது.

### ஜப்பானிய சாம்ராஜ்ஜிய சரணடைவு:

இரண்டாம் உலகப் போர் முடிவின் எண்பதாவது நினைவு தினத்தை முன்னிட்டு சீனாவில் மிகப்பெரிய ராணுவ அணிவகுப்பு செப்ரெம்பர் மூன்றில் நடந்தது.

இந்த அணிவகுப்பை 26 உலக நாடுகளின் தலைவர்கள் கண்டுகளித்தனர். இதில் மிக முக்கியமான தலைவர்கள் இருவர். ரஷ்ய அதிபர் புடின், வட கொரியா அதிபர் கிம் ஜாங் உன்.

சீன அதிபர் ஜி ஜின்பிங் உடன் இந்த இரு நாட்டுத் தலைவர்களும் ராணுவ அணிவகுப்பைக் கண்டுகளித்த புகைப்படம் இப்போது இணையத்தில் பெரிதும் கவனிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஜின்பிங், ஜப்பானின் ஆதிக்கத்திற்கு எதிராக சீனா வெல்வதற்கு காரணமாக இருந்த உலக நாடுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

### சீனாவின் அணிவகுப்பும் பலமும்:

சீனா அரசு தனது படை, ஆயுத மற்றும் ராணுவ பலத்தைக் காட்ட புதிய தலைமுறை ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள், போர் விமானங்கள், ஆரம்ப எச்சரிக்கை விமானங்கள் மற்றும் விமான நெரிசல் அமைப்புகள் ஆகிய அதிநவீன ஆயுதங்களை முக்கியமாகக் காட்சிப் படுத்தியது.

ஆனாலும் ஜின்பிங் தனது பேச்சில் அமெரிக்க நாட்டின் பெயரைக் குறிப்பிடவில்லை. இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்தப் போரின் முடிவிற்கு அமெரிக்கா முக்கியமான பங்காற்றியுள்ளது.

ஜின்பிங் அமெரிக்காவின் பங்களிப்பைக் குறிப்பிடாததை அடுத்து, அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது சமூக வலைத்தள பக்கத்தில், "சீனா விடுதலை பெற, அமெரிக்கா அதற்கு தந்த மிகப்பெரிய அளவிலான ஆதரவையும், அமெரிக்கா சிந்திய ரத்தத்தையும் சீன அதிபர் ஏன் குறிப்பிடவில்லை ?"என்று பெரிய கேள்வியை எழுப்பியதுடன் அதற்கு சீனா பதில் அளிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

'ஜப்பானியர்களை எதிர்த்து சீனாவின் வெற்றிக்காக பல அமெரிக்கர்கள் இறந்துள்ளனர். அவர்களின் வீரம் மற்றும் தியாகம் சரியாக கௌரவிக்கப்படும், நினைவுகூரப்படும் என்று நான் நம்புகிறேன். சீன அதிபர் ஜி மற்றும் சீனாவின் மக்கள் சிறந்த தினத்தை கொண்டாடட்டும்.

நீங்கள் அமெரிக்காவிற்கு எதிராகச் சதி செய்யும் போது, விளாடிமிர் புடின் மற்றும் கிம் ஜாங் உன் ஆகியோருக்கு எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவிக்கவும்" என்று பதிவிட்டுள்ளார் டிரம்ப்.

இந்தப் பதிவில் கோபமும், மிரட்டலும் கலந்திருக்கின்றன என்று எடுத்துக்கொள்ளலாம்.

### சீன - ரஷ்ய உறவு:

அலாஸ்காவில் கடந்த ஓகஸ்ட் 15ம் திகதி, அமெரிக்கா சென்றிருந்த புடின், டிரம்ப் உடனான சந்திப்பு முடிந்த அடுத்த சில மணி நேரங்களில் ரஷ்யாவிற்கு கிளம்பிவிட்டார்.

ஆனால், சீனாவில் இப்போது புடின் மூன்று நாள்களாக இருக்கிறார்.

அத்துடன் சீனாவில் இந்தியப் பிரதமர் மோடி உடன் அதிக நட்புடன் இருந்தார் புடின். இதேவேளை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி உடனான அமைதிப் பேச்சுவார்த்தை பற்றி இன்னமும் வாயைத் திறக்கவில்லை அவர்.

### மோடி - புடின் - ஜின்பிங் முத்தரப்பு:

மோடி, புடின், ஜின்பிங் ஆகிய மூன்று தலைவர்களும் 'இந்தியா, ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளும் ஒற்றுமையாக இருக்கின்றன' என்று ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் வலுவாக தெரிவித்திருந்தனர்.

இவை அனைத்தும் நிச்சயம் டிரம்பிற்கு கடுங் கோபத்தை ஏற்படுத்தியது என்பது உண்மைதான். இருப்பினும் அமெரிக்காவின் பெயரை தனது உரையில் ஜின்பிங் குறிப்பிடவில்லை என்பது மற்றொரு முக்கியமான குற்றச்சாட்டாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

### ராணுவ அணிவகுப்பில் மோடி இல்லை!

ஷாங்காய் மாநாட்டின்போது இந்தியப் பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் புடின் இடையே நல்ல நெருக்கம் காணப்பட்டது.

இந்த மாநாட்டின்போது இந்தியப்பிரதமர் மோடி, ஷி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புடின் இடையே இருந்த நெருக்கம் அமெரிக்காவிற்கே அச்சத்தை ஏற்படுத்தியது.

ஓகஸ்ட் 31 முதல் செப்ரெம்பர் 1ஆம் திகதி வரை நடந்த ஷாங்காய் மாநாட்டில், பத்து உறுப்பு நாடுகளின் உறுப்பினர்கள் தவிர கூட்டணி நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

ஆனாலும் பிரதமர் மோடி இந்த அணிவகுப்பில் பங்கேற்கவில்லை.

இரண்டாவது உலகப் போரில் பாசிசத்துக்கு எதிரான சீனாவின் இந்த அணிவகுப்பு ஜப்பானின் ஆதிக்கத்துக்கு எதிரானது. அதனால் இந்த அணிவகுப்பில் பங்கேற்று ஜப்பானுக்கு எந்தச் செய்தியும் சொல்ல இந்தியா விரும்பவில்லை. பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குதான் இந்தியா எதிரானதே தவிர ஜப்பானுக்கு எதிரானதல்ல என்றும் இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் இந்த அணிவகுப்பில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்தியப்பிரதமர் மோடி பங்கேற்கவில்லை என்பதில் இருதரப்புடனும் நல்லுறவை பேண முயல்வது தெளிவாகிறது.

### ஷாங்காய் உச்சி மாநாடு:

இந்தப் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பின் முன்னராக, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரச தலைவர்கள் குழுவின் 25வது உச்சி மாநாடு சீன ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது. இதன் முடிவில் ரஷ்ய -இந்திய - சீன முத்தரப்புக் கூட்டணி உருவானது, அமெரிக்காவிற்கு இது பெருஞ் சவாலாக எழுந்துள்ளது என்றும் விசனிக்கப்பட்டது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உலகின் மிகப்பெரிய பிராந்திய அமைப்பாகும். இதில் தற்போது 26 நாடுகள் அடங்குகின்றன. அதன் மொத்த பொருளாதார உற்பத்தி 30 டிரில்லியன் அமெரிக்க டொலரை நெருங்குகிறது.

### சீனாவின் பொருளாதார வளர்ச்சி நோக்கம்:

ஷாங்காய் உச்சிமாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த 24 ஆண்டுகளில் இந்த அமைப்பு பல வெற்றிகளைப் பெற்றுள்ளது என்று கூறினார். மாறிவரும் உலகத்தை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து உறுப்பு நாடுகளும் அமைப்பின் இலக்குகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மேம்பாட்டு வங்கியை விரைவில் நிறுவ வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரஸ்பர நன்மைகள் மற்றும் பொதுவான சாதனைகள் பொதுவான அடிப்படையில், திறந்த தன்மை மற்றும் பங்கேற்பு, நியாயம் மற்றும் நீதி, நடைமுறைவாதம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கடைபிடிக்கப்பட வேண்டும்

# வாயால் வந்த வினை: மன்னிப்பு கோருவதில் மௌனம்!



ஆஸ்திரேலியாவில் கடந்த மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்த லிபரல் கட்சி, தலைமைத்துவ மாற்றம் உட்பட பல மறுசீரமைப்புகளுடன் மீண்டுவரும் நிலையில், அந்தக்கட்சிக்கு மீண்டுமொரு சவால் ஏற்பட்டுள்ளது.

லிபரல் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சூசன் லே முன்னிலையில் பல சவால்கள் உள்ள நிலையில், புதிய சவாலும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

ஆஸ்திரேலியாவில் குடியேறும் இந்தியர்களின் எண்ணிக்கை அண்மைகாலமாக அதிகரித்து வருகிறது. இங்கு குடியேறிய வெளிநாட்டவர்களில் இங்கிலாந்துக்காரர்களுக்கு அடுத்தபடியாக இந்தியர்கள் 2-ஆம் இடத்தில் உள்ளனர்.

கடந்த 2023-ஆம் ஆண்டு கணக்கெடுப் பின்படி 8.4 லட்சம் இந்தியர்கள் இங்கு வசிக்கின்றனர். இதுதவிர, ஆயிரக்கணக்கானோர் ஆஸ்திரேலியாவிலேயே பிறந்து குடியுரிமை பெற்றுள்ளனர்.

இந்நிலையில், வெளிநாட்டினர் அதிக அளவில் குடியேறுவதற்கு எதிராக, நாடு முழுவதும் 'மார்ச் பார் ஆஸ்திரேலியா' என்ற பெயரில் பேரணி மற்றும் போராட்டம் நடைபெற்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் லிபரல் கட்சியின் செனட்டர் ஜசிந்தா நம்பிஜின்பா பிரைஸ்,

"பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தலைமையிலான லேபர் கட்சி, வாக்கு வங்கிக்காக இந்தியர்களை அதிக அளவில் குடியேற அனுமதிக்கிறது" என குற்றஞ்சாட்டி இருந்தார்.

இவரது இந்தக் கருத்து ஆஸ்திரேலிய வாழ் இந்தியர்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் ஜசிந்தா மன்னிப்புக் கோர வேண்டும் என அவருடைய கட்சியினர் உட்பட பலர் வலியுறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து ஆஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் கருத்து வெளியிடுகையில்,

"ஜசிந்தா தெரிவித்த கருத்தில் உண்மை இல்லை. அவருடைய கருத்து இந்தியர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இதற்காக அவர் மன்னிப்புக் கோர வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், செனட்டர் ஜசிந்தா நம்பிஜின்யா பிரைஸ் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்காக ஆஸ்திரேலியாவில் வாழும் இந்த சமூகத்திடம் லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜூலியன் லீசர் மன்னிப்பு கோரியுள்ளார்.

லீசர் சட்ட விவகாரங்களுக்கான எதிரணி செய்தி தொடர்பாளராக செயற்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செனட்டர் ஜசிந்தா இந்தியர்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் அழுத்தம் கொடுக்கப்பட்டுவந்தது. எனினும், அவர் இது விடயத்தில் மௌனம் காத்துவருகின்றார்.



# பிரிமேனை பிடிப்பதில் பொலிஸார் திணறல்!

இரு பொலிஸ் அதிகாரிகளை சுட்டுக் கொலை செய்த டேஸி பிரிமேன் என்பவரைக் கைது செய்வதற்குரிய தேடுதல் வேட்டை தொடரும் நிலையில் அவர் இன்னும் சிக்கவில்லை. அத்துடன், தேடுதல் வேட்டைக்கு இராணுவமும் களமிறக்கப்பட்டுள்ளது.

விக்டோரியாவில் போரேபுன்கா நகரிலுள்ள வீடொன்றுக்கு வழக்கு தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை நிறைவேற்றுவதற்கு பொலிஸார் சென்றிருந்த வேளை, இரு பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் ஒரு பொலிஸ் அதிகாரி காயமடைந்தார்.

பொலிஸாரை நோக்கி இவர் 20 தடவைகளுக்கு மேல் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்தச்சம்பவத்தையடுத்து 56 வயதான துப்பாக்கிதாரி தலைமறைவானார். தன்னிடம் இருந்த துப்பாக்கிகள் மற்றும் உயிரிழந்த பொலிஸாரிடம் இருந்த துப்பாக்கிகள் சகிதமே அவர் காட்டுக்குள் தப்பியோடி இருந்தார் .


பிரிமேன் 'இறையாண்மையுடைய குடிமக்கள்' எனும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் குழுவைச் சேர்ந்தவராவார். இவர் தீவிரவாதப் போக்குடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறையாண்மையுடைய குழு எனப்படுவது சதிக்கோட்பாட்டைக் கடைப்பிடிக்கின்றது. தற்போதைய அரச கட்டமைப்பை அந்தக் குழு ஏற்பதில்லை. இது கொரோனாப் பெருந்தொற்றுக் காலப்பகுதியில் தடுப்பூசிக்கு எதிராக தீவிர பிரசாரத்தை முன்னெடுத்த குழுவாகும். தாங்களே மேன்மையானவர்கள் என்பதே இந்தக்குழுவின் கொள்கை.

இந்தக்குழுவைச் சேர்ந்த பிரிமேன் அடர்ந்த காடுகளில் தலைமறைவாகப் பதுங்கி இருப்பது பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளார். பல நாட்கள் காடுகளில் தங்குவதற்கு அவர் பழகியுள்ளார். எனவே, அடர்ந்த காடு பற்றி அறிந்தவர்களின் உதவியுடனும் பொலிஸார் தேடுதலில் இறங்கினர்.

அவரின் மனைவி மற்றும் மகன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தாலும், விசாரணைகளின் பின் விடுவிக்கப்பட்டனர்.

பெடரல் பொலிஸார், புலனாய்வு அமைப்புகள் மற்றும் இராணுவம் உதவி செய்தும் அவரைக் கண்டறிவதில் விக்டோரியாப் பொலிஸார் திணறிவருகின்றனர்.



# அச்சுறுத்தும் 'வெள்ளை நச்சு பாம்பு'

ஆஸ்திரேலியாவென்பது பல்லின சமூகங்கள் வாழும் நாடு. பல மொழிகள், பல மதங்கள், பல கலாசாரங்கள் என பன்முகத் தன்மை கொண்ட நாடாகும். ஆஸியின் வளர்ச்சிக்கு புலம்பெயர் சமூகம் வழங்கிவரும் பங்களிப்பு அளப்பரியது.

எனினும், ஒரு சிலர் இனவெறியுடன் நடந்துகொள்ளும் நிலைமையும் காணப்படுகின்றது என்பது கசப்பான உண்மையாகும். அதேபோல பூர்வகுடி மக்கள்மீதான அடக்குமுறைகளும் தொடரவே செய்கின்றன.

ஆஸ்திரேலியாவின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ள நபர்களில் நவ நாஜிகள் தலைவர் முதன்மையானர் எனக் கூறுவதில் தவறில்லை என கருதுகின்றோம்.

வெளிநாட்டுக் குடியேற்றத்துக்கு எதிராக இம்மாத ஆரம்பத்தில் மெல்பேர்ணிலும் போராட்டம் நடைபெற்றது. இந்தப்போராட்டத்தில் பங்கேற்றிருந்த நவ நாஜிகள் தலைவர் உள்ளிட்ட குழுவினர், பூர்வகுடி மக்கள் ஒன்றுகூடி இருந்த பகுதிக்கு சென்று தாக்குதல் நடத்தினர். தடிகள் கொண்டு அவர்கள் தாக்கப்பட்டனர். பூர்வகுடி மக்களின் கொடியும் காலால் மிதிக்கப்பட்டது.

இந்தத்தாக்குதல் சம்பவத்தில் ஐவர் காயமடைந்தனர்.

நியூசிலாந்தை பூர்வீகமாகக்கொண்ட - ஆஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்றுள்ள நவ - நாஜிகள் தலைவர் தாமஸ் செவெல், ஆஸ்திரேலிய இராணுவத்தில் இரு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

இவர் தீவிர வலதுசாரி சிந்தனை கொண்ட நபராகவும், வெள்ளை மேலாதிக்க அணுகுமுறை கொண்டவராகவும் விளங்குகின்றார்.

இவரை மோசமான மனிதர் என்று நியூசிலாந்து பிரதமர்கூட விமர்சித்துள்ளார்.

இந்நிலையில் பூர்வகுடி மக்கள்மீது தாக்குதல் நடத்திய நவ - நாஜிகள் தலைவரின் குடியுரிமையை இரத்துச்செய்து, அவரை நியூசிலாந்துக்கு நாடு கடத்துமாறுகோரும் ஒன்லைன் மனுவில் ஒரு லட்சம்பேர்வரை கையெழுத்திட்டுள்ளனர்.

இது பற்றி நியூசிலாந்து பிரதமரிடம் வினவப்பட்டபோது, இது ஆஸ்திரேலியாவால் கையாளப்பட வேண்டிய விடயமெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியக் குடியுரிமை பெற்ற நபரின், குடியுரிமையை இரத்துச் செய்ய வேண்டுமானால் அது பற்றி உள்துறை அமைச்சர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கலாம். எனினும், இன்னும் அவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்படவில்லை.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நவநாஜிகள் தலைவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவருக்கு பிணை மறுக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் இருந்து அழைத்து செல்லப்படும்போது, "வெள்ளை ஆஸ்திரேலியர்களுக்காக நாம் தொடர்ந்து போராடுவோம்." - என்று அவர் கோஷம் எழுப்பியதையும் காண - கேட்க முடிந்தது.

பிரிமேனை பிடிப்பதில் பொலிஸார் திணறல்!

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI


# சீனச் சிறைகளில் வாடும் உய்குர் முஸ்லிம் மக்களின் அவலநிலை

# கண்டு கொள்ளாத இஸ்லாமிய நாடுகள்

● சபா.தயாபரன்

சீனா ஜின்ஜியாங்கின் வடமேற்குப் பகுதியில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான உய்குர் முஸ்லிம் மக்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக “மறு கல்வி முகாம்கள்” என்று அழைக்கப்படும் ஒரு பெரிய வலையமைப்பில் தடுத்து வைத்துள்ளதாக மனித உரிமைகள் குழுக்கள் சீனாவை குற்றம் சாட்டி நிற்கின்றன.

மனிதகுலத்திற்கு எதிரான நடவடிக்கையாக லட்சக்கணக்கான அப்பாவி உய்குர் முஸ்லிம் மக்களுக்கு சிறைத்தண்டனை, பாலியல் பலாத்காரம் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்முறை, பாலியல் சித்ரவதை ,பாகுபாடு, வெகுஜன தடுப்புக் காவல், கட்டாய உழைப்பு கட்டாய மதமாற்றம் இனப்படுகொலை மற்றும் பரவலான கண்காணிப்பு உள்ளிட்ட சித்திரவதை குற்றச்சாட்டுகளை இது “நம்பகமான” குற்றச்சாட்டுகளாக விவரிக்கிறது.

2022ஆம் ஆண்டில் பி.பி.சி.யால் பெறப்பட்ட காவல் துறை ஆவணங்கள் , சீனா இந்த தடுப்பு முகாம்களைப் பயன்படுத்துவது பற்றிய விவரங்களையும், ஆயுதமேந்திய சீன அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் அதிகாரத் துஷ்பிரயோக சித்திரவதைகள் மற்றும் தப்பிக்க முயற்சிப்பவர்களை சுட்டுக் கொல்லும் கொள்கைகள் இருப்பதையும் விலாவாரியாக விவரித்துள்ளன.

ஆனால் சீனாவோ ஜின்ஜியாங்கில் மனித உரிமை மீறல்கள் குறித்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுக்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாக ஜின்ஜியாங்கில் கொண்டு வரப்பட்ட உய்குர் மக்களின் அமைதியும் செழிப்பும் எல்லா வகையான பொய்களுக்கும் சிறந்த பதில் என்று இதற்கு பதிலளித்து உய்குர் மக்களின் மீதான அடக்குமுறையை மூடி மறைத்தது.

## யார் இந்த உய்குர் மக்கள்? சீனா இவர்களை தடுப்புக் காவலில் அடைத்து வைக்க என்ன காரணம்?

உய்குர்கள் என்பவர்கள் வடமேற்கு சீனாவில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் ஒரு முஸ்லிம் இனக்குழுவினர். சீனாவின் பரப்பளவில் மிகப்பெரிய மாகாணமான ஜின்ஜியாங்கில் சுமார் 12 மில்லியன் உய்குர்கள் வாழ்கின்றனர்.உய்குர் பெரும்பான்மையான முஸ்லிம் துருக்கிய இனம், மத்திய மற்றும் கிழக்கு ஆசியாவின் பொதுப் பகுதியிலிருந்து கலாசார ரீதியாக இணைந்துள்ளது. வடமேற்கு சீனாவில் உள்ள சின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பிராந்தியத்தின் பெயரிடப்பட்ட தேசிய இனமாக உய்குர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் வடமேற்கில் உள்ள ஜின் ஜியாங் மாகாணத்தில் வாழும் இஸ்லாமிய உய்குர் மக்கள் மற்றும் பிற இன கஜக்ஸ் மக்கள், கிர்கிஷ் மக்கள் மற்றும் துருக்கிய இன இஸ்லாமிய மக்களுக்கு எதிராக சீன அரசாங்கம் 2014-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்களை செய்து கொண்டிருக்கிறது. இது பெரும்பாலும் பண்பாட்டுப் படுகொலை என்று சர்வதேச அரங்கில் வகைப்படுத்தப்படுகிறது .

சீன அரசாங்கம் ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பிராந்தியத்தில உய்குர் முஸ்லிம்களுக்கு எதிராக பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற கடுமையான பொய்ப் பிரசாரத்தை இவர்கள் மேல் அவிழ்த்து விட்டு, அவர்களுக்கெதிரான வன்முறையான கைது நடவடிக்கைகளைத் தொடங்கியது.

எந்தவொரு சட்ட நடவடிக்கையும் இன்றி, ஒரு மில்லியனுக்கும் அதிகமான இஸ்லாமிய உய்குர் மக்கள் மற்றும் பிற இன கஜக்ஸ் மக்கள், கிர்கிஷ் மக்கள் மற்றும் துருக்கிய இன இஸ்லாமிய முஸ்லிம்களை தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்து அவர்களுக்கு எதிராக மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை சீனா பின்பற்றுகிறது.

சீனாவின் பெரும்பான்மை இனத்தவர்களான ஹன் குழுக்களை ஜின்ஜியாங்கிற்குள் பெருமளவில் இடம்பெயர வைத்து அங்குள்ள சிறுபான்மை மக்களின் தொகையைக் குறைப்பதற்காக சீன அரசால் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படும் ஒரு நடவடிக்கையாகவே இது கருதப்படுகின்றது.

2020 சீனாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சீனாவின் ஜின்ஜியாங் நகரில் சுமார் 11மில்லியனுக்கும் அதிகமான உய்குர் முஸ்லிம்கள் வாழ்கின்றனர், இது 25 மில்லியன் மக்கள் தொகையில் 45 வீதம் ஆகும்.10 மில்லியனுக்கும் அதிகமான உய்குர் மக்கள் வாழ்வதால், அதிகாரப்பூர்வமாக ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதி என்று அழைக்கப்படுகிறது.

பயங்கரவாதத்தைத் தடுக்கவும், இஸ்லாமிய தீவிரவாதத்தை வேரறுக்கவும் ஜின்ஜியாங்கில் ஒடுக்குமுறை அவசியம் என்றும், பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் கைதிகளுக்கு மீண்டும் மறு கல்வி கற்பதற்கு முகாம்கள் ஒரு சிறந்த கருவி என்றும் சீனா பொய்க் குற்றச்சாட்டுகளை உய்குர் முஸ்லிம் மக்கள் மேல் முன்வைக்கிறது.

உய்குர் மக்களை தீவிரவாதிகளாகச் சித்திரித்து அவர்கள் வெடிகுண்டுத் தாக்குதல்கள், நாசவேலைகள் மற்றும் குடிமக்களின் அமைதியின்மை ஆகியவற்றின் மூலம் ஒரு சுதந்திர நாட்டினை அமைக்க வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்றும் சீனா தன் பக்கத்தை நியாயப்படுத்துகின்றது. எனினும் இது உய்குர்களின் அடக்குமுறையை நியாயப்படுத்த அச்சுறுத்தலை பெரிதுபடுத்துவதாக சர்வதேச நாடுகள் சீனாவை குற்றம் சாட்டி நிற்கின்றன.



ஜின்ஜியாங் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை அனுபவித்து குடியிருப்பாளர்கள் குறிப்பாக உய்குர் மக்கள் மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகவும் சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறினார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும் நெதர்லாந்து உட்பட பல நாடுகள், சீனாவை இனப்படுகொலை செய்ததாக குற்றம் சாட்டியுள்ளன - சர்வதேச மாநாட்டில் “ஒரு தேசிய, இன அல்லது மதக் குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சிதைக்கும் நோக்கம்” என குறிப்பிட்டது.

பிரிவினைவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொய்க் குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவி உய்குர் செயற்பாட்டாளர்களைக் கைது செய்தல், தடுப்புக் காவல் முகாம்களில் அடைத்தல், கட்டாயக் கருக்கலைப்பு, கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடு, கட்டாய உழைப்பு, கொடுமை இழைத்தல், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு மற்றும் கூட்டுப் பாலியல் வல்லுறவு சித்திரவதை செய்தல் மற்றும் தூக்கிலிடுதல் என்பன சீனாவின் வன்முறை நடவடிக்கைகளுக்குள் அடங்கும்.

முஸ்லிம் மதப் பிரமுகர்களை குறிவைத்து, அப்பகுதியில் மத வழிபாட்டு முறைகளை தடை செய்வதாகவும், மசூதிகள் மற்றும் கல்லறைகளை அழிப்பதாகவும் சீனா மீது சர்வதேச நாடுகளால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு முதல், சீன அதிபர் ஜி ஜின்பிங் சீனாவில் உள்ள அனைத்து மதங்களும் சீன மத சார்பாக இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்ததிலிருந்து, மேலும் மத ஒடுக்குமுறைகள் அதிகமாகின.உய்குர் கலாசாரத்தை முற்று முழுதாக ஒழிக்க சீனா முயற்சிப்பதாக உய்குர் மத பிரசாரகர்கள் தங்கள் எதிர்ப்பை முன்வைக்கின்றனர்.

2019ஆம் ஆண்டுக்கு முந்தைய ஜின்ஜியாங் காவல்துறை கோப்புகள், பல ஆண்டுகளுக்கு முன்பு உய்குர் மக்களின் மேல் நடந்ததாகக் கூறப்படும் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட உய்குர்களை மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. உய்குர்கள் தங்கள் மதத்தை சுதந்திரமாக கடைப்பிடிப்பது, அவர்களின் மொழியை பேசுவது மற்றும் அவர்களின் உடை, மொழி, உணவுமுறை, கல்வி உள்ளிட்ட வாழ்க்கையின் பல அம்சங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. உய்குர் மத நிறுவனங்களை சீன அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. தொழுகை அல்லது மசூதிக்குச் செல்வது மதக் கடமைகளை நிறைவேற்றுவது போன்ற சாதாரண செயல்கள் கூட கைது அல்லது தடுப்புக்காவலுக்கு உள்ளாக்கப்படும் தண்டனைக் குற்றங்களாகவே சீன அரசால் பார்க்கப்படுகின்றன.

உய்குர்களை முகாம்களில் அடைத்து வைத்ததுடன், மக்களை ஒடுக்குவதற்கும் பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்கும் உய்குர் பெண்களுக்கு கட்டாயக் கருக்கலைப்பு மற்றும் கருத்தடை என்பன முகாம்களில் அரங்கேறி வருகிறது, குழந்தைகளை அவர்களது குடும்பங்களில் இருந்து பிரித்து, சீனக்கலாசாரத்தினுள் உள்வாங்கி உய்குர் மக்களின் கலாசார மரபுகளை உடைக்க முயற்சிக்கிறது என்று சர்வதேச மனித உரிமைகள் அறிக்கைகள் தெட்டத்தெளிவாக தெரிவிக்கின்றன.

“சீனா மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை” செய்து வருவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அன்டனி பிளிங்கன் கூறியுள்ளார்.

ஜின்ஜியாங்கில் சீனா இனப்படுகொலை செய்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றதாக 2021 ஏப்ரலில் இங்கிலாந்து நாடாளுமன்றம் அறிவித்தது.

சீனாவின் மனித உரிமை மீறல்கள் பற்றிய அதிர்ச்சியூட்டும் விவரங்கள் இருப்பதாக இங்கிலாந்து வெளியுறவுச் செயலாளர் லிஸ் ட்ரஸ் கூறினார்.

பி.பி.சி.யால் பெறப்பட்ட விரிவான புதிய கணக்குகளின்படி, சீனாவின் உய்குர்களுக்கான “மறு கல்வி” முகாம்களில் உய்குர் முஸ்லிம் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர் என்பதற்கான சான்றுகள் இருப்பதாகத் தெரிவித்தது.

சீனாவின் மேற்படி தடுப்பு முகாமில் 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு வெளியேறிய ஜின்ஜியாங்கைச் சேர்ந்த பெண்ணான ஜியாவுதீனை பி.பி.சி. பேட்டி கண்டபோது அவர் இப்படிக் கூறுகிறார்.

“உய்குர் பெண்களின் ஆடைகளை இடுப்புக்கு மேல் கழற்றி அவர்களுக்கு கைவிலங்கு போட்டு ஒரு அறையில் விட்டு வருவதே எனக்கிட்ட வேலையாக இருந்தது.அந்த பெண்களை அறையில் விட்டுவிட்டு வரும் போது ஒரு சீன அதிகாரி உள்ளே நுழைவான். அவன் அந்த அறையை விட்டு வெளியேறியதும் நான் அந்தப் பெண்ணை குளிக்க அழைத்துச் செல்வேன்.

இரவில் முகாம் அறைகளில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட பெண்களில் சிலர் திரும்பி வரவில்லை. மீண்டும் அழைத்து வரப்பட்டவர்கள், தங்களுக்கு நடந்த பாலியல் ரீதியான கொடுமையை மற்றவர்களுக்குச் சொல்லக் கூடாது என்று மிரட்டப்பட்டனர்.சில சமயங்களில் அழைத்துச் செல்லப்பட்ட பெண்களின் அலறல் ஒலி கேட்கவே மனதில் உயிர்ப்பயம் எடுக்கும். இந்த சாட்சியங்கள் “அட்டூழியம் தொடங்கியதிலிருந்து நான் நேரடியாகப் பார்த்த மிக பயங்கரமான சான்றுகள்” என்று ஜியாவுதீன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் ’பெண் கைதிகளின் முடி வெட்டப்பட்டு வகுப்புக்குச் செல்ல கட்டாயப்படுத்தப்பட்டு காரணமில்லாமல் அவர்கள் மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். கருத்தடை மாத்திரைகள் உட்பட பல மாத்திரைகளை பலவந்தமாக உட் கொள்ளவும் கருத்தடைச் சாதனம் அல்லது கருத்தடை செய்யவும் பலவந்தமாக கட்டாயப்படுத்தப்பட்டனர். அதில் இருபது வயதுடைய ஒரு பெண்ணும் அடங்கினாள். அவளுக்கு கருத்தடை செய்ய வேண்டாம் என்று நாங்கள் எவ்வளவோ கெஞ்சியும் அது பலனளிக்கவில்லை.

கைதிகள் தேசபக்தி சீனப் பாடல்களைப் பாடுவதிலும், சீன அதிபர் பற்றிய தேசபக்தி ரீதியிலான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பல மணிநேரம் பார்க்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதே சமயம் உணவு பற்றாக்குறை மிகவும் கடுமையானது.”

இது முன்பு கேள்விப்பட்டவற்றில் மிக மோசமானதை உறுதிப்படுத்துகிறது,பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகள் பற்றிய அதிகாரபூர்வமான மற்றும் விரிவான ஆதாரங்களை இது வழங்குகிறது, நாங்கள் கருதியதை விட தெளிவாக உள்ளதை ஜியாவுதுனின் வாக்குமூலம் தெளிவாக்குகிறது என்று பி.பி.சி. தெரிவித்தது.

சீனாவுக்கு வெளியே உள்ள ஒரு நாட்டிலிருந்து ஒளிப்பட இணைப்பு மூலம் பி.பி.சி.யிடம் பேசிய முன்னாள் முகாம் காவலர் ஒருவர் கூறுகையில்,

ஜி ஜின்பிங்கைப் பற்றிய புத்தகங்களில் உள்ள பகுதிகளைத் துல்லியமாக மனப்பாடம் செய்யத் தவறியது போன்ற மீறல்களுக்காக கைதிகளுக்கு உணவு நிறுத்தப்பட்டது.

“ஒருமுறை நாங்கள் கைது செய்யப்பட்டவர்களை வதை முகாமிற்கு அழைத்துச் சென்றோம், அந்தப் புத்தகங்களை மனப்பாடம் செய்யும்படி அனைவரும் கட்டாயப்படுத்தப்படுவதை நான் கண்டேன். அவர்கள் உரையை மனப்பாடம் செய்ய மணிக்கணக்கில் அமர்ந்திருக்கிறார்கள், அனைவரின் கைகளிலும் ஒரு புத்தகம் இருந்தது,” என்று அவர் கூறினார்.

சோதனைகளில் தோல்வியடைந்தவர்கள் ஒன்று, இரண்டு அல்லது மூன்று முறை தோல்வியடைந்தார்களா என்பதைப் பொறுத்து மூன்று வெவ்வேறு வண்ண ஆடைகளை அணிய வேண்டியது கட்டாயம். மேலும் அதற்கேற்ப உணவுப் பற்றாக்குறை மற்றும் அடித்தல் சித்ரவதை பாலியல் வதை உள்ளிட்ட பல்வேறு அளவிலான தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று அவர் கூறினார்.

“நான் அந்த முகாம்களுக்குள் நுழைந்தபோது நோய்வாய்ப்பட்ட, பரிதாபகரமான மக்களைப் பார்த்தேன். அவர்கள் நிச்சயமாக பல்வேறு வகையான உடல் உள சித்திரவதைகளை அனுபவித்திருந்திருந்தார்கள் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும் ”என்றார்.

சீன அரசாங்கம் உய்குர்களை ‘கடுமையான மனித உரிமை மீறல்கள்’ அல்லது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களாக நடத்துவதை ஆஸ்திரேலியா கடுமையாகக் கண்டித்துள்ளது.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், மறுகல்வி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் “பட்டம் பெற்றவர்கள்” என்று ஜின்ஜியாங்கின் ஆளுநர் கூறினார். பல முகாம்கள் உண்மையில் மூடப்பட்டிருப்பதை பத்திரிகையாளர்கள் கண்டறிந்தனர். ஆனால் அடுத்த ஆண்டு, ஆஸ்திரேலிய மூலோபாயக் கொள்கை நிறுவனத்தின் (ASPI) ஆராய்ச்சியாளர்கள் செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி 380க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்குரிய தடுப்பு வசதிகளை அடையாளம் கண்டனர்.

உய்குர் மக்கள் மீது மனித குலத்திற்கு எதிரான கொடூரக் குற்றங்களை தொடர்ந்து மேற்கொண்டு வரும் சீன அரசுக்கு எதிராக ஒரு சில சர்வதேச நாடுகள் பல கண்டனங்களை எழுப்பி இருந்தாலும் முஸ்லிம் உலகநாடுகள் வாய் மூடி மௌனித்து இதில் வெறும் பார்வையாளராக மட்டுமே இருப்பது பல கேள்விக்குறிகளையும் கண்டனக் குரல்களையும் எழுப்பி நிற்கிறது.

உய்குர் மக்களின் அடக்கி வைக்கப்பட்ட அவலம் துடைத்தெறியப்பட்டு உய்குர் மக்கள் சுதந்திரக் காற்றை அனுபவிக்க உலக நாடுகள் எந்த விதமான நடவடிக்கைகளை எப்போது மேற் கொள்ள முனைவார்கள் என்பதே இப்போதைய தொக்கி நிற்கும் கேள்வியாகும்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198



# NPP யின் அரசியலும் சிறுபான்மைச் சமூகங்களின் சவாலும்

● கருணாகரன்

வடக்குக் கிழக்கில் அரசியல் ரீதியாகத் தன்னைப் பலப்படுத்தி வருகிறது NPP. இதற்காக அது பல உபாயங்களைக் கையாள்கிறது.

1. சத்தமில்லாமல், பரபரப்புக் காட்டாமல் படைமுகாம்களைக் குறைத்து (அகற்றி) வருகிறது. பரபரப்பைக் காட்டினால் தென்பகுதியில் உள்ள தீவிரச் சக்திகள் அதை வைத்து அரசாங்கத்துக்கு எதிரான பரப்புரையைச் செய்ய வாய்ப்பாகி விடும் என்பதால் இந்தமாதிரி அமைதியான முறையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்கிறார் NPP யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

2. படைமுகாம்களை அகற்றும்போது மக்களின் காணிகள் விடுவிக்கப்படுகின்றன. இது அந்த மக்களிடம் நல்லபிப்பிராயத்தை உருவாக்குகிறது.

3. பல்வேறு வகையான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணம், முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலப் புனரமைப்பு. அதில் மிஞ்சும் நிதியில் மேலதிக வீதியை வன்னியிலேயே அமைப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதான விருத்தி. தீவுப்பகுதியில் குறிகாட்டுவான் இறங்குதுறைப் புனரமைப்பு. மயிலிட்டி மீன்பிடித்துறைமுக விருத்தி, வவுனியாவில் நீண்டகாலமாக இயங்காதிருந்த பொருளாதார மத்திய நிலையத்தை இயங்கு நிலைப்படுத்தியமை, முல்லைத்தீவு, பளை, பூநகரியை மையப்படுத்திய தென்னை முக்கோண வலயத்தை ஏற்படுத்தியமை.. போன்றன.

4. செம்மணி மனிதப் புதைகுழியை அகழ்வதற்கான நிதியை வழங்கியதோடு, அதை தொடர்ந்து அகழ்வதற்கான ஆதரவை வழங்கி வருவது. அத்துடன், மீட்கப்படும் எலும்புக் கூடுகள் தொடர்பாக நீதியான விசாரணை நடக்கும் என்று சொல்லியிருப்பது.

5. வடக்கு- கிழக்கில் இருந்த வீதித் தடைகள் அகற்றப்பட்டுள்ளன.

6. ஆனையிறவு உப்பளத்தை விருத்தி செய்வதுடன், ஆனையிறவு உப்பு எனப் பெயரிட்டிருப்பது. (முன்பு இது 'ரஜலுணு' எனப் பெயரிட்டதால் ஏற்பட்ட எதிர்ப்பு மற்றும் சர்ச்சையை அடுத்து, பெயர் மாற்றம் செய்யப்பட்டது).

இப்படியான விடயங்கள் NPP அரசாங்கத்தை நெருங்கி மக்களைச் செல்ல வைக்கின்றன. கவனிக்க வேண்டும்: NPP யை நோக்கி மக்கள் செல்கிறார்கள் என்பதையும் மறுவளமாக, தமிழ் அரசியற் கட்சிகள் எதிர்த்திசையில் தூர நிற்கின்றன என்பதையும். அரசியல் அர்த்தத்தில் சொன்னால், தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்ன செய்வதென்று தெரியாமல் கை-களைப் பிசைந்து கொண்டிருக்கின்றன. இதில் முன்பெல்லாம் அரசாங்கத்தை ஆதரித்த கட்சிகள், எதிர்த்த கட்சிகள் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. எல்லாவற்றையும் NPP தூரத் தள்ளி விட்டுள்ளது.

NPP யின் நோக்கமே இதுதான். வடக்கு- கிழக்கில் தன்னை விஸ்தரித்து, ஆழப்படுத்துவது. இதன்மூலம் அது முன்பு எந்தச் சிங்கள ஆட்சியாளர்களும் பெறாத செல்வாக்கையும் இடத்தையும் தான் உறுதிப்படுத்திக் கொள்வது, பெற்றுக் கொள்வதாகும்.

இப்படிச் செய்யும்போது NPP க்குச் சில லாபங்கள் கிட்டும்.

1. தமிழ் பேசும் அரசியல்தரப்பை மக்களிடமிருந்து விலக்கச் செய்தல். இதன் மூலம் அவற்றைப் பலவீனப்படுத்துவது.

2. அரசியல் உரிமைப் பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்தல். அல்லது அதைப்பற்றிய குரல்களை இல்லாமல் ஆக்குதல். பின்னர், தானே கருதுவதைப்போன்ற ஒரு தீர்வை நிறைவேற்றிவிடுவது.

3. மாகாணசபைத் தேர்தல் வரும்போது அதைத் தன் வசப்படுத்திக் கொள்வது.

4. நாடு முழுவதும் ஒரே கொள்கையின் கீழ் (ஒரே குடையின்கீழ்) என்பதை நடைமுறையில் காட்டுவது.

5. 'சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்ற ஆட்சி அல்ல இது. அனைத்து மக்களின் ஆதரவையும் அனுசரணையையும் பெற்ற ஆட்சியே தமது' என்று சர்வதேச சமூகத்திடம் காட்டிக் கொள்ளலாம் என்பது.

6. இதன்மூலம் சர்வதேச சமூகத்தின் நெருக்குவாரங்களைக் குறைக்கலாம் என்பது.

7. தான் விரும்புகின்ற அல்லது தான் கருதுகின்ற மாற்றத்தை எதிர்ப்புகள், மறுப்புகளின்றி, ஒட்டுமொத்தமாக முழு இலங்கையிலும் அமுல்படுத்துவது அல்லது நடைமுறைப்படுத்துவது.

இதற்கு உள்நாட்டில் குறித்த பிரதேசங்களில் உள்ள சமூக அமைப்புகள், நிறுவனங்கள் தொடக்கம் தனி நபர்கள் வரையில் அனைத்துத் தரப்புகளோடும் NPP தொடர்பு கொண்டு வேலை செய்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய தொடக்கம் அமைச்சர்கள் பிமல் ரத்நாயக்க, சந்திரசேகரன் வரையில் வடக்கு- கிழக்கில் கூடிய நடமாட்டத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விஜயங்கள் எல்லாம் உள்ளூரில் வேலை செய்கின்ற NPP யினரை ஊக்கப்படுத்தவும் அவர்கள் வேலை செய்வதற்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதுமேயாகும்.

ஏறக்குறைய இதையொத்த நிலையைத்தான் முன்பு ராஜபக்ஸக்கள் செய்ய முயற்சித்தனர். அதற்காகப் பஸில் ராஜபக்ஸவும் நாமல் ராஜபக்ஸவும் வடக்கிலேயே படுத்துக் கிடந்தனர். 'வடக்கின் வசந்தம்', 'கிழக்கின் உதயம்' என்று விசேட வேலைத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அப்பொழுது ஒரு நண்பர் பகடியாகக் கேட்டார், "நாமல் அம்பாந்தோட்டையில் பிறந்தாரா? கிளிநொச்சியில் பிறந்தாரா? அடுத்த தேர்தலில் கிளிநொச்சியில்தான் நிற்கப்போகிறாரா (போட்டியிடப்போகிறாரா?" என்று. அந்தளவுக்கு அவர்களுடைய கவனப் புலம் வடக்கிலிருந்தது.

மறுவளமாகத் தம்முடைய முகவர்களாக அங்கயன் ராமநாதன் போன்றோரையும் தமக்கிசைவான முறையில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி போன்றவற்றையும் பயன்படுத்தினர்.

மட்டுமல்ல, NPP இப்பொழுது காட்டும் படத்தைப்போல (இப்படிச் சொல்வதையிட்டு NPP யின் ஆதரவாளர்களுக்கு வருத்தம் ஏற்படலாம். சிலருக்கு கோபமும் வரலாம்) அல்லது அது மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப்போல முன்பு ஆட்சியிலிருந்த மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க போன்ற தரப்பினரும் சில நடவடிக்கைகளை வடக்கு- கிழக்கில் மேற்கொண்டனர் அப்படிச் செய்வதன் மூலமாக அங்குள்ள தமிழ் பேசும் மக்களைத் தமக்கு கிட்ட அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால், அப்போது மக்கள் ஒரு எல்லையோடு நின்று கொண்டனர். அவர்களுக்குத் தெரியும், இதெல்லாம் சுத்தமான ஏமாற்று என. இதனால் தமக்குரிய ஏஜென்டுகள் எனச் சிலரையும் சில நபர்களையும் மட்டுமே தம் வசப்படுத்திக் கொள்ளவும் கையாளவும் முடிந்தது அந்தத் தரப்புகளால். ஆகவே மக்களை அந்தத் தரப்பினரால் தம் வசப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

NPP இதைக் கடந்து மக்களுடன் ஐக்கியமாகிறது. இதற்குச் சில காரணங்களுண்டு.

1. ஐ.தே.க, சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுனவைப்போல நேரடியாக தமிழ் பேசும் மக்களின் மீது ஒடுக்குமுறையையும் போரையும் NPP யோ JVP யோ மேற்கொள்ளவில்லை. அதனால் மனித உரிமை மீறல் பிரச்சினையில் தமிழ் பேசும் மக்களுக்கும் NPP க்கும் இடையில் வெறுப்போ, கோபமோ, தகராறோ நேரடியாக இல்லை. இப்பொழுது ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் என்ற அடிப்படையில் இந்த விடயத்தை அது எப்படிக் கையாள்கிறது என்று அவதானிப்பு உள்ளதே தவிர, நேரடியாகக் குற்றம் சாட்டவோ, கோபத்தைச் சாதிக்கவோ இடமில்லை என்பது.

2. ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றை NPP செய்யவில்லை என்பது. அதற்கான சூழலும் NPP க்கு இருக்கவில்லை. அது இப்பொழுதுதானே அதிகாரத்துக்கு வந்துள்ளது. இருந்தாலும் NPP ஊழலைச் செய்யாது என்றொரு நம்பிக்கை சனங்களிடம் காணப்படுகிறது.

3. ஊழல்வாதிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் செய்தோர் மீது NPP நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. ஆகவே அதற்குத் தாமும் ஆதரவளிக்க வேண்டும் என்ற உணர்வு மக்களிடம் ஏற்பட்டிருப்பது.

4. மாற்றங்களைச் செய்யக் கூடிய - செய்ய விரும்புகின்ற ஒரு அரசாங்கமாக NPPஐ மக்கள் உணர்வதும் நம்புவதுமாகும். எனவே அதற்குத் தாம் ஆதரவளிக்க வேண்டும் என்று கருவது.

இப்படியான காரணங்கள் அல்லது சூழல் மக்களிடம் காணப்படுவதால் NPP மக்களுடன் நெருக்கமாகி வடக்கு = கிழக்கில் பலமடைந்து கொண்டேயிருக்கிறது.

இதை முறியடித்துத் தம்மை நிலைப்படுத்திக் கொள்வதற்கு தமிழ் பேசும் மக்களுடைய அரசியலும் இல்லை. தமிழ் பேசும் அரசியற் கட்சிகளிடம் மாற்றுச் சிந்தனையும் மாற்று வேலைத்திட்டங்களும் இல்லை.

எப்போதுமே எதிர்ப்பு அரசியலைச் செய்து பழகிய தடத்திலேயே NPP யையும் கையாள்வதற்கு அல்லது எதிர் கொள்வதற்கு இவை முற்படுகின்றன.

இது சனங்களில் ஒரு தொகுதியினருக்கு மேலும் எரிச்சலை - சினத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாறு தமிழ்க்கட்சிகள் மீதும், முஸ்லிம் தலைமைகளின் மீதும் சினமடைவோர் NPP யின் பக்கமாகவே சாய்கிறார்கள்.

இதற்கு வாய்ப்பாகப் புலம்பெயர் சூழலில் NPP க்கு ஆதரவான அலை தமிழ்பேசும் மக்களிடம் உள்ளது. இத்தகைய ஆதரவு அலை முன்பு எந்த ஆட்சியாளர்களுக்கும் இருக்கவில்லை. ஆகவே அதையும் NPP தனக்கிசைவாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

NPP யை எதிர்க்கும் தமிழ்த் தரப்பினர் சொல்வது, வடக்கு= கிழக்கு மாகாணசபையை JVP பிரிப்பதற்குக் காரணமாக இருந்தது. இலங்கை - இந்திய உடன்படிக்கையை JVP எதிர்த்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு முட்டுக்கட்டையாகச் செயற்பட்டது போன்ற காரணங்கள் அல்லது குற்றச்சாட்டுகளே.

ஆனால், மாகாணசபைத் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்திருப்பதன் மூலமாக மாகாணசபைகளுக்கு எதிரான குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப்பார்க்கிறது NPP. அதைப்போலவே, இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவை அநுரவின் அரசாங்கம் பேணத் தொடங்கி விட்டது. ஆகவே அதுவும் - இந்திய எதிர்ப்புடன் NPP இருக்கிறது என்று சொல்வதும் இனிச் செல்லாது. இனப்பிரச்சினைக்கான தீர்வில் NPP யோ JVP யோ எத்தகைய தீர்வு யோசனையுடன் உள்ளன என்ற ஒன்றுதான் இப்போதுள்ள கேள்வி. இதுதான் அடிப்படையான கேள்வியுமாகும். இந்தக் கேள்வியிலிருந்தே சரியான - பொருத்தமான அரசியலை தமிழ்பேசும் சக்திகளும் தென்னிலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகளும் முன்னெடுக்க வேண்டும்.

ஏனென்றால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தோடு அதிகாரத்தில் இருக்கும் NPP இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதற்கான அரசியலமைப்பு, இவற்றோடிணைந்த பொருளாதார அபிவிருத்தி அல்லது பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு ஆகியவற்றைக் காண வேண்டும். இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஒன்றை விட்டு ஒன்றுக்குத் தீர்வைக் காணவே முடியாது. குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வு - நிவாரணம் - நீதி வழங்கல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும். அவற்றைச் செய்யாத வரையில் NPP யின் நடவடிக்கைகள் மேலோட்டமான 'படங்காட்டுதல்'களாகவே இருக்கும். வரலாறும் அப்படித்தான் கொள்ளும்.

ஆகவே இதை வைத்து NPP யை மடக்கக் கூடிய அரசியல் வல்லமையை - புதிய சிந்தனையை - தந்திரோபாயத்தை எந்தத் தமிழ்த் தரப்பிடமும் காண முடியவில்லை. தென்னிலங்கை அரசியற் சக்திகளிடத்திலும் தென்படவில்லை.

ஆக ஒன்று மட்டும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் பேசும் அரசியற் கட்சிகளில் பலவும் இப்பொழுது ஒரு முகப்படத் தொடங்கியுள்ளன. இருந்தாலும் இவற்றின் சிந்தனையும் செயற்பாடும் பலமாக உருவாகாத வரையில் மந்தைத் தனமே நீடிக்கும். அது சிங்கிளாக இருந்தாலும் சிங்கம் சிங்கம்தான் என NPP யைப் பலப்படுத்துவதாகவே அமையும். தென்னிலங்கையிலும் ரணில் விக்கிரமசிங்கவின் கைதை வைத்து ஒரு திரட்சியை - எதிர்த்தரப்பின் ஒருங்கிணைவை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது. ஆனால், சரியான வேலைத்திட்டமில்லாமல் NPP யை எதிர்கொள்ள முடியாது.

இப்போதுள்ள நிலையில் 'அண்ணன் எப்போது காலியாவார்? திண்ணை வெளிப்பதற்கு' என்ற நிலையில்தான் எதிர்த்தரப்புகள் அனைத்தும் உள்ளன. அதாவது NPP தானாகவே தோற்றால் நல்லது என்ற மாதிரி. இது அரசியலில் உபயோகமில்லாத - பலவீனமான ஒரு சிந்தனையாகும்.

எனவே தமிழ் பேசும் தரப்புகள் தமக்குள் கூடப் பேசிப் பறைந்து புதிய சிந்தனையுடன் கூடிய அரசியல் ஒன்றை - நடைமுறைக்குச் சாத்தியமான - வெற்றியைப் பெறக் கூடிய - மக்களுக்கு உச்ச நலனைத் தரக்கூடிய வழியைக் காண வேண்டும். வரலாறு அதையே பணிக்கிறது. வரலாற்றின் குரலை, அதனுடைய உணர்வைப் புரிந்து கொள்வது அரசியற் தலைமைகளின் கடமையும் பொறுப்புமாகும். அதைப் பதற்றப்பட்டு உணர்ச்சிகரமாக அணுகாமல், நிதானமாக அறிவுபூர்வமாக அணுக வேண்டும். அதுவே மக்களுக்கான வெற்றியைத் தரும்.

காலம் அதையே பணிக்கிறது. காலத்தின் குரலைக் கேட்க வேண்டும் என்பதே வளர்ச்சியின் விதியாகும்.

'மாற்றங்களை ஏற்படுத்தும் ஆட்சி' என்ற பிரகடனத்துடன் செயற்படும் தேசிய மக்கள் சக்தி (NPP), அதிகாரத்துக்கு வந்து ஓராண்டு காலத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது? என்ற கேள்வி பலருக்கும் உண்டு. அதையெல்லாம் மக்கள் இன்னும் பொருட்டாகக் கருதவில்லை என்பதே உண்மை.

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதம் சிறப்பாக இருக்கும். நீதிமன்றம் தொடர்பான வழக்குகளில் உங்களுக்கு நிவாரணம் கிடைக்கும். தொழில் தொடர்பாக ஒரு பயணம் செல்ல வேண்டியிருக்கலாம். உங்கள் வேலையை மற்றவர்களிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்கவும். திருமண வாழ்க்கை சாதாரணமாக இருக்கும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு, செப்ரெம்பர் மாதம் சில சவால்களுடன் தொடங்கும். குடும்பத்திலும், பணியிடத்திலும் பொறுப்புகள் அதிகரிக்கும், ஆதரவு குறைவாக இருக்கும். அதனால் திட்டமிடலும், கடினமான உழைப்பும் தேவைப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட குறைவான லாபம் இருக்கும். காதல் உறவுகளின் ஆரம்பம் பலவீனமாக இருக்கும். திருமண வாழ்க்கை இனிமையாக இருக்கும். வாழ்க்கைத் துணையுடன் ஒரு ஆன்மிகப் பயணம் சாத்தியமாகும். வெளிநாட்டில் தொழில் அல்லது வணிக வாய்ப்புகள் தேடுபவர்களுக்கு கிடைக்கும்.

## துலாம்

இம்மாதம் துலாம் ராசிக்காரர்களுக்கு நல்ல அதிர்ஷ்டமும், மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருக்கும். தொழில் தொடர்பாக சில பெரிய சாதனைகள் படைப்பீர்கள். இது மரியாதை மற்றும் நம்பிக்கையை அதிகரிக்கும். நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணிகள் நிறைவடையும். நீதிமன்றம் தொடர்பான விஷயங்களில் உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கலாம். வெளிநாடு தொடர்பான தொழில் பெரும் வெற்றியைப் பெறலாம். செல்வம் குவியும். புதிய வருமான வாய்ப்புகள் அதிகரிக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

## மகரம்

மகர ராசிக்காரர்கள் கோபத்தில் எந்த ஒரு முடிவையும் எடுக்க வேண்டாம். இது பாதக விளைவை ஏற்படுத்தும். சிலருக்கு திடீர்ச் செலவுகள் வர வாய்ப்பு உண்டு. எனவே, பாதீடு தயாரித்து செயற்படுவது நல்லது. வீடு மனை தொடர்பான தகராறுகள் தீரும். உணர்ச்சிவசத்தைக் கட்டுப்படுத்தவும். வணிகம் தொடர்பாக போட்டி அதிகரிக்கும். உங்களுக்கு சேரும் பணத்தை புத்திசாலித்தனமாக முதலீடு செய்யவும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்கள் தங்கள் உடல்நலனில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். குடும்ப உறுப்பினருடன் தகராறு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. காதல் உறவுகளில் எச்சரிக்கை அவசியம். வியாபாரத்தில் போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தொழில் மற்றும் வணிகத்தில் முன்னேற்றம் காணப்படும். வேலையில் இருப்பவர்கள் கூடுதல் வருமான வாய்ப்புகளைப் பெறலாம். எந்தவொரு பெரிய முடிவையும் கவனமாக எடுங்கள்.

## சிம்மம்

சிம்ம ராசிக்கு செப்ரெம்பர் மாதத்தில் தங்கள் நேரம், சக்தி மற்றும் பணத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டியிருக்கும், இல்லையெனில் பிரச்சினைகள் அதிகரிக்கக்கூடும். பருவகால நோய் அல்லது பழைய பிரச்சினைகள் உங்களைத் தொந்தரவு செய்யலாம், எனவே உங்கள் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். தொழிலில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். உங்கள் குழந்தைகளிடமிருந்து உங்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். காதல் மற்றும் திருமண வாழ்க்கை சாதாரணமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இம்மாதம் மிகவும் நன்மை கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும், தொழிலை விரிவுபடுத்த முடியும். ஒவ்வொரு முக்கியமான வேலைகளை முடிப்பதிலும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். விளையாட்டு, போட்டித் தேர்வுகளை எழுதும் மாணவர்கள் வெற்றியைப் பெறலாம். உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் விவேகத்தால் செல்வம் சேரும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும்.

## கும்பம்

கும்ப ராசிக்கு செப்ரெம்பர் மாதத்தில் திடீரெனப் பெரிய வெற்றிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. பணியிடத்தில் சக ஊழியர்கள், கூட்ட அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்புடன் செயற்படவும். முரட்டுத்தனமாக நடந்து கொள்வது அல்லது முடிவு எடுப்பதை தவிர்க்கவும். ஆலோசனை உங்களுக்கு உதவும். பணியிடத்திலும் வேறு பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. போட்டித் தேர்வில் மாணவர்கள் வெற்றி பெறுவார்கள். வணிகம் தொடர்பாக முன்னேற்றம் ஏற்படும்.

## மிதுனம்

மிதுனம் – இந்த மாதத்தில் உங்கள் நேரத்தையும் சக்தியையும் சரியாகப் பயன்படுத்தினால், நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள். வீட்டில் ஆன்மிக, சுபச் செயல்களில் ஈடுபடலாம். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் இருக்கும். காதல் உறவுகள் நன்றாக இருக்கும், திருமண வாழ்க்கையிலும் பதற்றம் இருக்கலாம். தொழிலில் கலவையான பலன்களைப் பெறலாம். நண்பர்களின் ஆதரவும் பணப் பலன்களும் உங்களுக்குக் கிடைக்கும்.

## கன்னி

தங்கள் ஆசைகளையும், லட்சியங்களையும் நிறைவேற்ற அதிக முயற்சி தேவைப்படும். பணியிடத்தில் பணிச்சுமை அதிகரிக்கும், தொழில் அல்லது வணிகம் தொடர்பான பெரிய முடிவுகளை கவனமாக எடுக்கவும். எதிரிகள் சுறுசுறுப்பாக இருப்பார்கள், எனவே திட்டங்களை முன்கூட்டியே வெளியிட வேண்டாம். உணவு மற்றும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். மாத இறுதியில் சாதகமான சூழல் இருக்கும். தொழிலில் லாபம் பெறுவீர்கள். காதல் வாழ்க்கையில் நிதானமாகச் செயற்படவும். குடும்பத்துடன் மோதல்கள் இருக்கலாம்.

## தனுசு

பணப்பரிவர்த்தனை விஷயங்களில் கவனமாக இருக்கவும். உங்களின் தொழில் வணிகம் தொடர்பாக பெரிய சலுகைகளை பெறலாம். உங்களின் நம்பிக்கை அதிகரிக்கும். பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும். செல்வாக்கு மிக்க நபர்கள் மூலம் சில நல்ல வாய்ப்புகள் பெறுவீர்கள். எதிரிகள் விஷயத்தில் கவனமாக இருக்கவும். பிறர் மீதான அதிக நம்பிக்கை நிதி இழப்பை ஏற்படுத்தும். வியாபாரம் தொடர்பாக லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## மீனம்

மீன ராசியினருக்கு இம்மாதம் பெரிய ஏற்ற இறக்கங்கள் இருக்காது. தொழில் அல்லது வியாபாரம் தொடர்பாக தடைகள் தாண்டி முன்னேற வாய்ப்பு கிடைக்கும். பணியிடத்தில் சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். வீடு நிலம் தொடர்பான கவலை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கடின உழைப்புடன் செயல்படுவர். உடல்நலம் தொடர்பில் அலட்சியமாக இருக்க வேண்டாம். வேலை அல்லது குடும்பம் தொடர்பாக சில முக்கியமான முடிவுகளை எடுப்பதில் மும்முரமாக இருப்பீர்கள். திருமண வாழ்க்கையில் விட்டுக்கொடுத்துச் செல்லவும்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling?
# Sell your home for only
# 1% Commision.

**We get you the best price, without the big commission — only 1%**

Call for a **free**, **no-obligation** market appraisal. **No hidden costs no gimmicks.** We look after **property management** as well.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

Terms and Conditions apply*


PRESERVATIVES NO ADDED
MONOSODIUM GLUTAMATE MSG NO ADDED
ATHAVAN
ஆதவன் ආතාවන්
PRODUCTS
PREMIUM PRODUCTS FROM
Jaffna
மிளகாய்த்தூள்
මිරිස් කුඩු
CHILLI POWDER
வல்லாரை பிட்டுமா
CENTELLA PITTU FLOUR
வறுத்த கறித்தூள்
ROASTED CURRY POWDER
மஞ்சள் தூள் කහ කුඩු
TURMERIC POWDER
தானிய சத்துமாக்கலவை
CEREAL NUTRIENT MIXTURE
யாழ்ப்பாணத்து கறித்தூள்
JAFFNA CURRY POWDER
Roasted
Jaffna
CURRY POWDER
WEIGHT
900g
prepared using
Traditional methods.
Distributed in Australia,
Sri Lanka, and other countries.
SRI AYYAPPA (PVT) LTD.
40 David St, Dandenong VIC3175
Australia.
+61 449 722 392 | +61 3 7049 9441
sriayyappa.ptyltd@gmail.com
SRI AYYAPPA GROUP (PVT) LTD.
Kaithady Weast, Kaithady, Jaffna,
Sri Lanka.
+94 74 158 3717
sriayyappa.lk@gmail.com
www.sriayyappa.com.lk
சிட்னி தொடர்புகளுக்கு: கோணேஸ்வரன் | 0450021469 | singamwaran@gmail.com